உ

ஓம் தத் சத்

பரப்பிரஹ்மணே நம:.

சம்ஸ்கிருதத்தில்

ஸ்ரீ ஆநந்த போதேந்திர சரஸ்வதி ஸ்வாமிக ளவர்கள்

திருவாய் மலர்ந்தருளிய

ஸ்வாராஜ்ய சித்தி.

இது

கோவிலூர் மடாலயம்

ஸ்ரீ வீர சேகர ஞாந தேசிக ஸ்வாமிக ளவர்கள்

பாத சேகரரும், உபய பாஷா வேதாந்தப்

ரவர்த்தகாசாரியரும், பரசமய கோளரியாரும் ஆகிய

ஸ்ரீ காசிகாநந்த ஸ்வாமிக ளவர்களால்

மொழி பெயர்க்கப்பட்டு

மங்கலம் - ஷண்முக முதலியாரால்

சென்னை,

கோமளேசுவரன் பேட்டை,

சச்சிதாநந்த அச்சியந்திர சாலையில்,

பதிப்பிக்கப்பட்டது.

1919.

Copy-right Registered.

விலை அணா எட்டு.

முகவுரை.

உலகத்திலுள்ள எல்லாச் சீவர்களாலும் விரும்பப் படுவன வற்றுள் மோக்ஷம் ஒன்றே உயர்வுடையதாம். அதற்குச் சாதநம் பிரஹ்ம ஞாநமாம். அதனை உண்டாக்குவது அத்தியாத்ம சாஸ்திரமாம். அவ்வத்தியாத்ம சாஸ்திரங்கள் விரிந்தும் சுருங்கியும் பல விருக்கின்றன. அவற்றுள் இச் சுவா ராஜ்ய சித்தியு மொன்றாம்.

இது ஸ்ரீ ஆநந்த போதேந்திர சரஸ்வதி சுவாமிக ளவர்களால் மூன்று பிரகரணரூபமாக 163 - சுலோகத்தில் அதி கம்பீரமுடைய சாஸ்திரார்த்த ரூபமாக எழுதப்பட்டது. ஷை சுவாமிகள் எழுதிய வாசிட்டத்தின், வாசிட்ட மஹா ராமாயண தாத்பரியப் பிரகாச மென்னும் உரையில், உற்பத்திப் பிரகரணத்தில், 21 - வது சர்க்கத்தில், 23 - வது சுலோகத்தில், இதன் இரண்டாவது பிரகரணத்தில் 11-வது சுலோகத்தினைப் பிரமாணமாகக் காண்பித்துத் தாம் எழுதியதாக அறிவித் திருக்கின்றார்கள்.

சம்ஸ்கிருதத்திலுள்ள இஷ்ட சித்தி, நைஷ் கர்மிய சித்தி, அத்வைதப் பிரஹ்ம சித்தி, அத்வைத சித்தி என்னும் நான்கிற்கும் பிற்பட்டுச் செய்தது இந்தச் சுவா ராஜ்ய சித்தியாம்.

இது தமிழில் வாராதது கருதி நைஷ்கர்மிய சித்தி முதலியவற்றை மொழி பெயர்த் துதவிய ஸ்ரீ காசிகா

நந்த ஸ்வாமிக ளவர்களால் செந்தமிழில் வசந நடையில் மொழி பெயர்க்கப்பட்டது. அத்வைதப் பிரஹ்ம சித்தி, அத்வைத சித்தி முதலியவற்றையும் மொழி பெயர்த்து வருகின்றார்கள். அவையும் சீக்கிரம் வெளி வரும்.

1 - 4 - 1919. ம. ச.


TANJORE

சிவமயம்.

ஸ்ரீ வீரசேகரஞான தேசிகாய நம꞉.

ஸ்வாராஜ்ய சித்தி.

செய்ய வீரநற் சேகரச் செம்மருள்
அய்ய வென்மநத் தன்புட னண்மியே
துய்ய நற்சுவ ராஜ்ஜிய சித்தியை
உய்ய வேயுல குள்ளார்க் குரைப்பனுல்.

முதற் பிரகரணம்.

1. கங்கையின் பிரவாகத்தினுல் அத்தியந்தஞ் சலிக்கப்பட்ட ஜடைகளினின்றும் கீழிறங்கிய பாம்பினுற் பயமுற்று அதனுல் திடமாகப் பரமேஶ்வரனுடைய சரீரத்தினைக் கட்டித் தழுவிக்கொண்டு சிவனுடைய சரீரத்தில் மூழ்கி யிருக்கப்பட்ட பர்வதராஜன் புத்திரியை மந்தஹாசத்தோடு பார்ப்பவராயும், நமஸ்காரம் முதலியவற்ருல் நம்ரீபாவத்தினை அடைந்த முமுக்ஷு ஜநங்களின் சமூகத்தினை சஹஜப் பிரீதியினுல் உண்டான கடாக்ஷத்தினுல் ஆநந்தஞ்செய்வித்தும் இருக்கின்ற (உண்மையில்) நிரதிசயாநந்த ஸ்வரூபப் பரப்பிரஹ்ம சந்திரமௌளியாகிய சிவன், நம தஞ்ஞாநாந்தகாரத்தினை நாசஞ் செய்க.

2. ஜநந மரண பயத்தினை மீண்டுமீண்டும்ஸ்மரித்து, வைராக்கியத்திற்குக் காரணமான விஷய தோஷ தரிசந விருத்தி உண்டானவனுய், இருதயத்தில் பிரவேசித்துள்ள உமாகாந்தனுகிய பசுபதியை மீண்டு

மீண்டுந் தியாகித்து, (பின்னர்) சீக்கிரம் பரமாநந்த ரூப அமிருத தாரையை மீண்டு மீண்டுங் குடித்துக் கொண்டு, தனது குருவினது திருவடிக் கமல மிரண்டினையும் மீண்டு மீண்டும் (நான்) நமஸ்கரிக்கின்றேன்.

3. எவரிடத்தி னின்றும் ஜகத் துண்டாகின்றது, எவரிடத்தில் இருக்கின்றது, பிரளயத்தில் எந்த ரூபத்தை யடைகின்றது, எவர் சத்திய ஞாந சுக ஸ்வரூபர், தேச வஸ்து காலங்களாலாய பரிச்சேத மின்றியவர், எவர் ஜாக்கிர ஸ்வப்ந சுழுத்தி அவஸ்தைகளில் விளங்குகின்றார், ஏகர், சோக மின்றியவர், அவஸ்தாத்திரய சம்பந்த மின்றியவர், எவரது கிருபையினால் சர்வாநுகதப் பிரஹ்மம் நானா யிருக்கின்றேன், அந்தத் தேசிகேந்திரரைச் சேவிக்கின்றேன்.

4. அத்தியயந யக்ஞ தாந விரத ஜப உபாசனை இந்திரிய நிக்கிரகங்களால் நிர்மல அந்தக்கரண முடையவர்களாயும், இந்த ஜகத்து அசார மென்னும் நிச்சய முடையவர்களாயும், ராகத் துவேஷ மின்றியவர்களாயும், பிராணிகளுக்குப் பய முண்டாகாத சேஷ்டையுடையவர்களாயும், மோக்ஷ இச்சை யுடையவர்களாயுமுள்ள புருஷர்களுக்கு, கேட்டலினாலே நற்சுகங் கொடுப்பதாயும், மநதிற்குச் சுகங் கொடுப்பதாயும், உபகாரஞ் செய்வதாயும் உள்ள ரகஸியமான சுருதி தாத்பரியப் பிரகரணத்தை நாம் சொல்லுகின்றோம்.

5. "தேவனை அறிந்து (அதன்பின்) சர்வ பாசங்களும் நாச முறுகின்றன." "(அதனை அறிந்து மிருத்தியுவைக் கடக்கின்றான்) வேறு மார்க்க மில்லை (மோக்ஷத்திற்கு)" எனபனவாதி அநேக வாக்யங்களால் ஆத்ம ஞாநத்திற்குச் சாக்ஷாத் மோக்ஷ காரணத் தன்மை

சித்திக்கில், பந்தத்திற்கு அத்தியாசத்தன்மை அர்த்த (ஸத்தப்பிரமாண)த்திறைற் சித்திக்கின்றது.

6. (லோகத்தில்) கடாதிகள், கர்மத்திறைல் நாச மடைகின்றன எதறைல், (அதறைல்) சத்தியமாயும் பாவ பதார்த்தமாயு முள்ள ஞாநம் நாசஞ் செய்யப்படுகின்ற தில்லை; (அங்ஙனமே) கர்மம் (கிரியை) மித்தியா பூதமான சுத்தி ரசதாதிகளை நாசஞ் செய்கின்ற தில்லை. எதறைல் அது (மித்தியா பூதமான வஸ்து) அதிஷ்டாந ஞாநத்திறைல் நாச மாகின்றது (லோகத்தில் பிரசித்தம்). இவ்வாறு வஸ்து ஸ்வபாவ பேதஞ் சித்திக்கு மிடத்து, வேதாந்த வாக்கியத்திறைல், ஞாநத்திறைல் நாச மடைவதென்று நிச்சயிக்கப்பட்ட பந்தமானது மித்தைதயென்று சித்திக்கில், அதன் (பந்தத்தின்) நாசத்தின் பொருட்டு (அக்கி ஹோத்திராதி) கர்ம சமூகமானது (தனது ஸ்வபாவத்திறைல்) சமர்த்த மன்று.

7. அஞ்ஞாந மூலமான இந்தப் பந்தமானது ஞாந மின்றிக் கர்மக் கூட்டங்களால் நாச மடைவ தில்லை. மாலையிற் கற்பிக்கப்பட்ட சர்ப்பமானது, நமஸ்கார மந்திர ஔஷத முதலியவற்றுல் நாசத்தினை யடைகின்றதா வென்? இவ்வாறு நிச்சயஞ்செய்து, சாத்திரம் சாற்றிய மார்க்கத்திறைல் கர்ம பந்தநத்தினைச், சர்ப்பமானது ஜீர்ணமான தோலை விடுவது போல் விட்டுத், தத்துவ நிஷ்டராகிய குருவினது சீர்பாதங்களை நேர் சென்றடைந்தவனுய்ச் சேவை செய்து கொண்டு ஞாந உபாயமாய சிரவண முதலியவற்றில் யத்நஞ் செய்க.

8. சிலர் (பாட்ட ஏகதேசிகளும் பிரபாகரரும்) பல இச்சை யின்றிச் செய்யப்பட்ட (நித்திய நைமித்திக) கர்மமே புகன்ற மோக்ஷ அடைவின் சாதநமாக நிச்ச

யிக்கின்றனர். அந்நியர் (பர்த்திருப் பிரபஞ்ச பாஸ்கரர் முதலியோர்) கர்மமும் பிராணாதி உபாசனையும் சேர்ந்து முக்தியில் சாதந மென்று கூறுகின்றனர். வேறு சிலரோ ஞாநம் கர்மம் என்னும் இரண்டும் மோக்ஷத்திற் சாதந மென்று கூறுகின்றனர். (எதனால் இந்த ஆசாரியர்கள்) தங்கள் புத்தியினால் (வேதார்த்தத்தை) கற்பிக்கின்றனர் (அதனால்) ஞாநத்தாலே (கைவல்யம்) என்னும் வாக்கியமாகிய ஹேதுவினால் மோக்ஷ சாதந விசாரத்தில் நாம் அந்தப் பக்ஷங்களைச் சஹசமாக அங்கீகரிப்ப தில்லை.

9. பிதிரு லோகமானது நித்திய நைமித்திக யாகாதி கர்மங்களால் அடையத்தக்கது என்று(வேதத்தால்) நிச்சயிக்கப்படுகின்றது. (அங்ஙனமே) உபாசனா கர்மத்தினால் தேவ லோகமானது (அடையத் தக்கதென்று வேதத்தினால் நிச்சயிக்கப்படுகின்றது). அல்லது, வித்தை, கர்மங்கட்கு (“கஷாய பக்குவம் கர்மங்கள்” என்பதாதி) ஸ்மிருதியிற் கூறப்பட்ட ராகத்துவேஷாதி சம்ஸ்கார ரூபமாக ஹிருதயத்தி லுள்ள மலத்தின் நாசமே பலமாக இந்த லோகத்தி லிருக்குக. (அல்லது) யஞ்ஞத்தினால் என்பதாதி வாக்கியத்தினால் ஞாந இச்சை, அல்லது ஞாநம், அல்லது நித்தியாதி கர்ம பலம் இருக்குக. (அங்ஙன மாயினும்) மோக்ஷமோ ஞாநத்தாலே உண்டாம். (எதனால்), சசகவது (முயல்) சிஹ்மப் பிள்ளையினைப் பெறுவ தில்லை. (ஸ்வபாவம் காரணமாம்).

10. தநவான், சமர்த்தன், மூவர்ணமுடையோன், பண்டிதன், (நான்) என்னு மபிமாந முடையோன் கர்மத்தில் அதிகாரி (என்று மீமாம்சா சாஸ்திரத்தில்

கூறப்பட் டிருக்கின்றது. அங்ஙனமே) சாந்தன், தாந்தன் பரிவிராட், (சந்நியாசி) உபாதி யுடையோன், பிரவித்தையின் அதிகாரி (என்று வேதாந்தத்திற் கூறப்பட்டிருக்கின்றது). இவ்வாறு பேத மிருக்கு மிடத்து, ஞானம் கர்மம் என்னு மிரண்டும் கூறிய மோக்ஷத்திற்குக் காரணமாகக்கூற இச்சிக்கும் வாதி ஆ! ஆ! தாகத்தினை நிவர்த்திக்கும் இச்சை யுடையவனாய், மிகத் தட்ப முடைய நீரும், அக்கினியும் என்னும் இரண்டினையும் (ஒன்றாக) அருந்துக.

11. ஞானமும், அத்துவிதீய, ஸ்வயம், சாரரூப, சுககன, சர்வபரிச்சேத சூந்ய, சிந்மாத்ரரூப சைதந்ய ஸ்வரூபப் பிரஹ்ம, ஆத்மாவினது ஏகத்துவத்தைப் போதிக்கின்றது. கூறிய ஞானமானது, நல்ல புத்தியினையுடைய முக்கிய அதிகாரியாகிய புருஷனுக்கு, தத்துவமசியாதி வாக்கியத்தினால் உண்டாகின்றது. தனக்குப் பிரஹ்மத்தன்மை அறிந்திருப்பினும், தேக முதலியவற்றில் அத்தியாச திடத்தன்மையினால், சஹசமாகச் சம்பாதிக்கத் தக்க தன்று. அக்காரணத்தினால், யுக்தி குரு உபதேசங்களால் உண்மை வெளியாம் வண்ணம் (நிச்சய பரியந்தம் தனக்குப் பிரஹ்மாத்மத் தன்மையை) விசாரிக்கத் தக்கது.

12. சிலர்(சார்வாகர்)தேகத்தினை ஆத்மா வென்று கூறுகின்றனர். வேறு (சார்வாகர்) இந்திரியங்களை ஆத்மா வென்கின்றனர். வேறு சிலர் பிராணன்களை ஆத்மா வென்கின்றனர். வேறு சிலர் மநத்தினை ஆத்மா வென்கின்றனர். வேறு (வைநாசிகர்) (விருத்தி ஞானரூப)க்ஷணிக புத்தியினை ஆத்மா வென்கின்றனர். வேறு சிலர் (பாஸ்கரர் முதலியோர்) ஸ்திரமான புத்தியினை ஆத்மா வென்கின்றனர். சிலர் (சாங்கிய பாதஞ்சலர் முதலியோர்) சுக துக்காதி சங்க மின்றிய சித்மாத்

திரத்தினை ஆத்மா வென்கின்றனர். வேறு பாட்டர்கள் சித் ஜட ஸ்வபாவம் ஆத்மா வென்கின்றனர். வேறு பிரபாகர நையாயிகர் முதலியோர் சித்தோடுகூடிய ஞாந குண ஜடத் திரவியத்தினை ஆத்மா வென்கின்றனர். வேறு வேதாந்திகள் சத்திய ஞாந சுக அத்விதீய ரூபத்தினை ஆத்மா வென்கின்றனர். கூறிய பக்ஷத்தில் ஜிஞ்ஞாசுவிற்கு எந் நிச்சய முண்டாம்? (ஒரு நிச்சயமு முண்டாகாது).

13. சிலர் (பாசுபத பாஞ்சராத்திராதி ஆகம முணர்ந்தோர்)அந்த ஆத்மாவை அணு வென்கின்றனர். சிலர்(ஆர்ஹதந்தாதிகள்) ஆத்மா தேக பரிமாண மென்கின்றனர். வேறு நையாயிகர் முதலியோர் ஆத்மா வியாபக மென்கின்றனர். கூறிய மூன்று வாதிகளும் ஆத்மாவினை மாநசப் பிரத்தியக்ஷ விஷய மென்கின்றனர். அவர்களினும் வேறாய சாங்கியர் முதலியோர் ஆத்மாவினை நித்திய அநுமாந விஷய மென்கின்றனர். வேறு வைநாசிகர்கள் ஆத்மாவினை விருத்தி ஞாந விஷய மென்கின்றனர். வேறு வேதாந்திகள் ஆத்மாவினைப் பஞ்சகோசங்களுக்கும் உள்ளிருக்கும் பரம ஜோதி யென்கின்றனர். இவ்வாறு மத பேதம் இருக்குமிடத்துச், சிஞ்ஞாசுவுக்குச் சுருதி யுக்திகளால் மீண்டு மீண்டும் (சாக்ஷாத்கார பரியந்தம்) விசாரஞ் செய்தல் உசிதமாம்.

14. இவ்வாறே (ஜீவாத்மா போன்றே) சில கபில மதத்தர்கள் ஜகத்தின் உபாதான காரணம் பிரகிருதி என்கின்றனர். சில வைநாசிகரும் ஆர்ஹந்தரும் நான்கு பூதங்களின் பரமாணுக்களை ஜத்காரண மென்கின்றனர். சில பாதஞ்சல கணாத கௌதம சம்பந்தி

கள், ஈஶ்வரனுல் பிரேரிக்கப்பட்ட பிரகிருதியையும் பரமாணுக்களேயும் ஜகத்காரண மென்கின்றனர். சில விஞ்ஞானவாதிகள், க்ஷணிக விஞ்ஞானமே ஜகத் காரண மென்கின்றனர். சில மாத்தியமிகர், சூந்யம் ஜகத் காரண மென்கின்றனர். சில லோகாயதர், ஸ்வபாவம் ஜகத் காரண மென்கின்றனர். சில முஹூர்த்த வாதிகள் காலம் ஜகத் காரண மென்கின்றனர். சிலர் யதிருச்சை (அகாரனம்) ஜகத் காரண மென்கின்றனர். வேறு மீமாஞ்சகர், கர்மம் ஜகத் காரண மென்கின்றனர். வேதாந்திகள், மாயா சபளிதப் பிரஹ்மம் ஜகத் காரண மென்கின்றனர். ஆகலின், மத பேத மிருத்தலால், ஜகத் காரணமும் ஜிஞ்ஞாசுவால் விசாரிக்கத் தக்கதேயாம்.

15. ஜகத்தினது உத்பத்தியும், ஸ்திதியும், லயமும், எதனினின்று முண்டாகின்றனவோ, எதுமாயையினுல் சாஸ்திர மொன்றூ னுணரத்தக்கதும், சர்வஞ்ஞுமோ, எது ஸ்வபாவரூபமான சுக ஸ்வரூபமும், அத்வைத ஞாந ரூபமுமோ, அந்தப் பிரஹ்மம், தனது சாக்ஷியாம். கூறிய பிரஹ்மமே வேதாந்த வாக்கியங்களினது தாத்பர்ய லக்ஷியமாம். அப்பிரஹ்மம் நிஜ ஸ்வரூபமாம். எந்தப் பிரஹ்மரூப நிஜ ஆத்மாவை அறிந்து, மஹாத்மாக்கள் ஜநந மரண சமுத்திரத்தினே இந்தச் சன்மத்தில் ஸ்வயம் தாண்டுகின்றனர்?

16. இந்தச் சகத்தினது உத்பத்தியில் சாங்கியர்களால் பிரசித்தமாகக் கூறப்பட்ட அந்தப் பிரதாநம் சமர்த்த மன்று. தார்க்கிகர்களால் கூறப்பட்ட நிமித்த காரணரூப ஈசுவரனும் கூறிய சகல காரிய உத்பத்தியில் சமர்த்த னன்று. காணுத பௌத்த க்ஷபணகர்களாற் கூறப்பட்ட அணுவும் சமர்த்த மன்று. சிலர் கூறிய சாக்ஷியின்றிய சூநியமும் சமர்த்த மன்று. ஆகலின்,

வேதாந்திகளினுடைய இந்தச் சுருதியினுற் கூறப்பட்ட பரப்பிரஹ்மமே, சகல காரிய உத்பத்தியில் ஆதி காரணம் (என்பது) சித்தித்தது.

17. குணத்திரய சாம்யரூபப் பிரதாநம் (புருஷ போகத்தின் பொருட்டுச் சிருஷ்டியில்) பிரவர்த்தித்தற்குச் சமர்த்த மன்று; எதனுல் ஜடமாகலின் பிரதாநத்தினைப் பிரவிருத்தி ஸ்வபாவமாக அங்கீகரிக்கின், சதா சிருஷ்டியே உண்டாகவேண்டும். (ஒரு காலத்தும் பிரளய மின் றென்பது பொருளாம்). எதனுல், அதிருஷ்டமும் சிருஷ்டி பூர்வமாம் (பிரவிருத்தியாற் சிருஷ்டி யிருக்கில் உண்டாகின்றது) பூர்வம் இன்று. பந்தம் அகாரணமாம். அதன்பின் பந்த மோக்ஷங்களின் வியவஸ்தை யின்மை ஏன் உண்டாகாது? புத்திமாணுகிய புருஷன், ஆநந்த மின்றிய மோக்ஷத்தையும் இச்சிப்ப தில்லை. அந்தக் காரணத்தினுல் கபில மதம் தோஷத்தோடு கூடியதாம்.

18. மற்றும், அகர்த்தாவே போக்தா வாயின், அஹோ! கிருத ஹாந அகிருதாப்யாகம மென்னும் (செய்தவினை அழிந்து செய்யாத வினை தோன்றிற் றென்னும்) தோஷ முண்டாம். அசங்கமாயும், அதிசய மின்றியதாயு முள்ள புருஷனிடத்தில் எவ்வாறுய போக முண்டாம்? புருஷ போகத்தினுல் போக்கியமாய பிரதாநத்திற்குத் தன் பிரயோஜனம் யாதுளது? அவிவேகம் எவ்வாறுயது? அவிவேகம் யாவர்க்கு? அதன்பின் அவிவேகம் போக காரணமாக எவ்வாறு உண்டாகின்றது? விவேகம் யாவர்க்கு உண்டாகின்றது? அந்த விவேகத்தினுல் யாது உண்டாகின்றது? என்று விசாரிக்கும் பிரஹ்மாவிற்கும் (கபிலமதம்) நிரூபிக்கக்கூடியதன்று.

19. (தர்க்கத்தினுனே காரணத்தினை நிரூபிக்கும்) தார்க்கிகர்களுடைய, சரீர இந்திரிய, இச்சாப் பிரயத்நம் முதலிய குண மின்றிய ஈஸ்வரன், பிரதாநத்தினைப் பிரவிர்த்தித்தற்குச் சமர்த்துடைய னலன். சரீரம், இந்திரியம் முதலியன உடைய னுவனேல், புண்ணிய பாபங்களா லுண்டாய போகம் ஈஸ்வரனுக் குண்டாகும். துக்கப் பிரதாநமாகச் சகத்தைச் சிருஷ்டிக்கின்ற இவனுக்கு விஷம நைஷ்கிருண்ய (நிர்த்தயைத்) தோஷங்க ளுண்டாம். (சுக துக்கங்களைக் கொடுத்தற்குக்) கர்மத்தினை இச்சிப்பவனாக அங்கிகரிக்கின், சக்கிரிகா, அநவஸ்தை, விபலம், அந்யதா சித்தி முதலியன உண்டாம்.

20. சதா எல்லாவற்றையும் விஷயஞ் செய்யும் ஞாநம், இச்சை, கிருதி யென்பவற்றோடு கூடினவன் ஈஸ்வர னுவனுயின், எல்லாக் காரியங்களும் எப்பொழுதும் உண்டாக வேண்டும். (ஜகத்தின்) உத்பத்தி ஸ்திதிப் பிரளயங்களும் ஒரே காலத்தி லுண்டாம். ஜகத் துத்பத்தியில் பாஹ்ய உபாதாந காரணம் போன்று, சரீர இந்திரிய புத்திகளி னுடைய அபேக்ஷையும் (அவனுக்கு) உண்டாம். (ஈஸ்வர சாதக) அநுமாநமும் (வியபிசார சங்கையினை நிவர்த்திக்கும்) தர்க்க மின்றியதாம். எதினுல், யத்நமும், சேஷ்டை (சரீரக் கிரியை) யினுல் காரியத்தினைச் செய்கின்றது.

21. வேறு அசத் காரிய வாதியே! (த்வியணுக உத்பத்தியின்பொருட்டுச் சம்யோகத்திற்கு ஸ்ருஷ்டியின் ஆதியில்) பரமாணுக்கட்குக் கிரியை எக்காரணத்தா லுண்டாம்? பின்னர் நிரவயவமான அணுக்கள் எங்ஙனங் கூடும்? த்வியணுகம், காரணமாகிய பரமாணுக்

களினின்றும் எங்ஙனம் வேறும்? பரமாணுவி லுள்ள பரிமாணத்தினல் (த்வி யணுகம்) மஹத் (பரிமாண முடையது) ஏன் ஆகாதாம்? த்வி யணுகத்தினின்று முண்டான திரி யணுக பதார்த்தமானது, மஹத் பரி மாண முடையது எங்ஙனமாம்? மற்றும் இந்தத் திரி யணுக பதார்த்தமே நித்தியமாக உங்கட் கேன் நித்தி யம் ஆவ தில்லை? அணு, அல்லது, பரமாணு நித்தியமும் நிரவயவமும் எங்ஙனமாம்? கூறுக.

22. வேத விரோதியாகிய சுகதனைப் புகலப்படும் ரீதியாற் கேட்க:—சரீரத்தி னின்றும் வெளியில் உள்ள சர்வ பூத பௌதிகங்களும் க்ஷணிக மென்றும், நான்கு பூதங்களின் பரமாணுக் கூட்ட ரூபம் போக்கியம் என் றும், சரீரத்தினுள் பாஹ்யம் போன்றே, ரூப, விஞ்ஞாந, வேதநா, சம்ஞா, சம்ஸ்காரம் என்னும் பெயரினை யுடைய, சவிஷயேந்திரிய, ஹங்காரேந்திரிய நிர்வி கல்ப ஞாந, சுக துக்க ஞாந, சவிகல்ப ஞாந, ராகத் துவேஷ தர்மாதர்மாதி ரூபமான பஞ்ச ஸ்கந்தங்களை யும் போக்த்ரு சமுதாயம் என்றும் கூறும் ஹே ஜடனே! ஹே கெட்ட புத்தி யுடையோனே! உனக்குப் பிரத்தியக்ஷம் முதலிய வேறு பிரமாணத்தினல் இந்த க்ஷணிகத் தன்மை முதலியன நிச்சயிக்கப்பட் டதா? அல்லது, இந்த க்ஷணிகத்தன்மை முதலிய கற்பனை உனது புத்தி வைபவமா? அல்லது, (இந்த வுனது) வியர்த்த வசநமானது மோஹத்தாை? அல்லது, ஜந வஞ்சந இச்சையாலா?

23. கிரியை யின்றிக், கிரியையின் உத்பத்தி க்ஷணத்தில் இன்றிய அணுக்கட்கு எவ்வாற்றால் சங்கி யா (கூட்ட முடையதா)கும். (அணுக்களோடு) அபிந்ந

மான சங்கமானது, தேசாதிரூப பரமாணுக் கூட்டமான விஷய பதவியினை எவ்வாறு அடையும்? மற்றும் பூத பௌதிக ரூப சங்கத்தை எது விதிக்கின்றது? ஸ்கந்தங்களின் சங்கம் எந்தப் பிரகாரம் போன்று? (இந்தச் சங்கமும் வேறு கர்த்தாவை அபேக்ஷிப்பது சமானமே.) போக்திருத்தன்மை எத்தனைக்கு? (அஹமாகார விஞ்ஞான) தாரை யாது? போக மோக்ஷங்கள் யாவர்க் குண்டாம்? ஹே ஜடனே! கூறுக. உன்னுடைய தரிசந (சாஸ்தர)ம் எவ்வாற்றால் பலனுடையதாம்?

24. போக்திரு,போக்கியமாய இருவித சமுதாயம் அவித்தை முதலியவற்றின் பிரவிருத்திக்குக் காரணமன்று. எதனால், அவித்தை முதலியன, ஒன்றொன்றனில் நாசமாவன. நாசமாகும் பதார்த்தமானது உத்பத்தி செய்வதில் சமர்த்தமாவ தில்லை. அரே! காரியம் ஹேதுவின் சம்பந்த மின்றியதா? காரியம் ஹேதுவின்றியதாயின், கரண நிஷ்பலத் தன்மை, தனது பிரதிஞ்ஞை விரோதங்களாம். அபாவத்தின்கண் மூவகைத்தாந் தன்மை எங்ஙனமாம்? கெட்ட புத்தனது விருத்தமான அநேந வாதம் பொருத்த முடையதன்றாம்.

25. பிரத்தியக்ஷாதிப் பிரமாண சித்த பாஹ்ய கடாதி வஸ்து இன்றென்று கூறற்க. பாஹ்ய வஸ்து ஸ்வீகரிக்கப்படா விடத்து ஞாநம் நாநாப் பிரகாரமாக எது போன்று உண்டாம்? (ஸ்வப்நம் போன்று வாசனை வைசித்திரியத்தினால் ஞாந வைசித்திரியமெனின்)ஜாக்கிர பதார்த்தங்களின் பாதமானது பார்க்கப்பட வில்லை. "பாஹ்யம்" என்னும் பதம் பிரசித்தமான எவ்வர்த்தத்தினையும் அடையாது. விஞ்ஞாந பேதங்கள் எங்ங

னம் அறியு மாற்ற லுடையன. மற்றும், நாநாவித வாசனை எக்காரணத்தினால் உண்டாம்? மற்றும், க்ஷணிக விஞ்ஞாநத்தில் முன்னர்க் கூறிய தோஷங்கள் உண்டாம். அக்காரணத்தினால், விஞ்ஞாந வாதம் நஷ்ட மாயிற்று.

26. ஓரிடத்தும் அபாவத்தி னின்றும் பாவ பதார்த்தத்தின் உத்பத்தி அறியப்பட வில்லை. ஒரேவிதமான சூந்யரூப அபாவத்தினின்றும் விசித்திர காரியம் உண்டாகாது. அந்த அபாவத்தோடு கூடிய எல்லாச் சகத்திலும் "அசத் அசத்" என்றே ஞாந முண்டாம். உனக்கு அபாவப் பிரசித்தி எப்பிரமாணத்தா லுண்டாயது? (சாமாந்யாபாவ ரூப காரணம் யாண்டு மிருத்தலின்) எல்லாக் காரியங்களும் யாண்டும் ஏன் உண்டாகா? யத்நம் இன்றியே எல்லாருடைய அபீஷ்டமு முண்டாம். (ஆகலின்), ஹே ஜடனே! ஆத்மாவைக் கொல்லுகிற (தனக்கு நரகத்திற்குக் காரணமான சத் உபதேசத்)தில் நீங்கள் எங்ஙனம் பிரவிர்த்தித்தீர்கள்?

27. கடாதி ஒரு பதார்த்தம் எழுவகைத்தாக மாட்டாது. எல்லாப் பொருளும் அநைகாந்த மாகுமாயின், எழுவகைத்தாந் தன்மையு (சப்த விதத்வமு)ம் கடாதி போன்று அநைகாந்திக மாகுக. மற்றும், ஜீவன், அஜீவன் முதலிய அர்த்தங் (பொருள்)கள் எழுவகைத் தேனுவ தில்லை? (இஷ்டமாயின்), ஜகத்தும் சாஸ்திரமும் வியவஸ்தை யின்றியனவாம். விரோத மிருத்தலின், உனது சாஸ்திர நிச்சயமும் சந்தேக ரூபமே யாம். மற்றும், பந்த மோக்ஷ வியவஸ்தைத் யின்மை உண்டாம். ஆகலின், ஹே வஸ்திர மின்றியவனே! சர்வம் அநைகாந்திகம் என்னும் வாதமானது

கட் குடியன் வார்த்தை போன்று அர்த்த மின்றிய தென்றும், கொள்ளத்தக்க தன் றென்றும், விளங்கு கின்றது.

28. இவ்வாறே ஹிரண்யகர்ப்ப உபாசகர் முதலி யோர்களாற்கூறப்பட்ட ஜகத் காரணமும் ஆதரித்தற்கு யோக்கிய முடைய தன்று; எதனால், சுருதிகளால் எந்தப் பிரஹ்மாவினது உத்பத்தி நிச்சயிக்கப்பட் டிருக்கின்றது. இரண்டு பரார்த்தம் அளவுடைய ஆயுள், புராணாதிகளில் நிரூபிக்கப்பட் டிருக்கின்றது. மற்றும், எதனால், வேதமானது காரியப் பிரஹ்மத் திற்கு ஞாந சக்தி முதலியவற்றின் அடைவினை ஈஶ்வர னிடத்தினின்றும் அறிவிக்கின்றது. ஆகலின், சுருதி ஒன்றுனே அறியத்தக்கதாயும், அத்விதீயமாயும், மாயா சபளிதமாயு முள்ள பிரஹ்மமே (ஜகத்திற்கு) ஆதிகாரண மாதல் உசிதமாம்.

29. தமது ஜந்ம கால முதல் சிலர் துக்கியும் வேறு சிலர் சுகியுமா யிருத்தல் யாவர்க்கு எவ்வேது வால் உண்டாகின்றது? (அங்ஙனமே பால் குடித்தல் முதலியவற்றில் பாலகனுக்கு) முதற் பிரவிருத்தி எவ் வேதுவால் உண்டாகின்றது. சரீரமும் எவ்வேதுவால் உண்டாகின்றது? (அங்ஙனமே) மரித்தோன் அறிவ தில்லை. (ஸ்வபாவமே விசித்திர துக்காதி காரண மெனின்) காரண சமத்தன்மையில் ஸ்வபாவத்தன்மை சமமாகின்ற தென்பது தீபம் பீஜாங்குரம் முதலியவற் றில் பிரசித்தமாம். சுக துக்காதி வைசித்திரியமாகிய விஷமமானது கர்மத்தினாற் ஜநிக்கின்ற தென்று கூறு வாயாயின், சரீர உத்பத்திக்கு முன்னரும் ஆத்மா சித் திக்கின்றது.

30. (ஆத்மாதி நிச்சயத்தில்) மாநசப் பிரத்தியக்ஷ ரூபமொன்றே பிரமாணமாமாயின், உன்னால் கூறப்பட்ட வசநம் எங்ஙனம் பிரமாணமாம்?(நீ) கூறுக. பிரமப்பிரமாதி தோஷமுடைய புருஷ ஜந்யத் தன்மை ரூப தோஷத்தோடு கூடிய உன்னாற் கூறப்பட்டதும், நிச்சயிக்கப்பட்ட அர்த்தத்தினையுடைய பிரமாணமாமாயின், தோஷமின்றிய வேதம் பிரமாண மன்றா? (பிரமாணமேயாம்). இந்திரியங்களா னன்றிப் பிரத்தியக்ஷம் சித்திப்ப தில்லை. (அது) பிரத்தியக்ஷத்தின் கண்ணே பிரமாணத் தன்மை உனக்குச் சுலப மன்று. நீங்கள் அந்நிய புருஷனுடைய ஞாநத்தினை அறிதற்குச் சமர்த்துண்டையவ ராகமாட்டீர்கள். கூறிய எல்லா ஹேதுவானும் (நீங்கள்) பொய் கூறும் ஸ்வபாவமுடையோ ராவீர்கள்.

31. ஜநங்கட்கு, "ஸ்தூலன், யௌவநன், குசலன், நான்" என்று சரீரத்தின்கண் ஆத்ம புத்தி ஸ்வபாவமாகவே சித்தித் திருக்கின்றதாகவின், இந்த ஸ்வபாவ சித்த தேஹாத்மத் தன்மையினை அறிவிக்கும் உன்னுடைய தரிசநம் நிஷ்பலமாம். (உனது தரிசநம்) வேதத் த்வேஷத்தால் பிரவிருத்தித் திருக்குமாயின், ஆ! ஆ! த்வேஷ மூலமானது அத்தியந்தம் பிரமாண மன்று. (ஆகலின்) ஹே வஞ்சனே! கெட்ட பிராரத்தத்தால் நீ ஒருவன் விபரீத புத்தி யுடையவனாகப் பிறந்தாய். ஆ! ஆ! அந்நியர்களைக் கொல்லுதற்கு எதன் பொருட்டுப் பிரவிருத்திக்கின்றாய்?

32. மாதா பிதாக்களின் சுக்கில சோணிதத்தினால் உண்டானதாயும், ஜடமாயும், சாப்பிடுதலினாலே விருத்தி யடைவதாயும், ஷட்பாவ விகாரமாயும், சர்

மம், அஸ்தி, ஸ்நாயு, மாம்சம், மாலே, ஆகார, மலம், மஜ்ஜை, ரக்த ரூபமாயும், அதிஸ்வல்பமாயும், மாநச சரீர வியாதிகளோடு கூடியதாயும், பிராணன் நீங்கிய காலத்து மட்பாண்டத்திற்குச் சமாநமானதாயும், (பின்) மலம், புழு, சாம்பல் ரூபமாகப் பரிணமிப்பதாயும், உள்ள அந்தத் தேகத்தினை, ஹே, மூடனே! எவ் வேதுவால் "நான்" (ஆத்மா) என்று அங்கீகரிக்கின்றாய்? (மூடனா யிருத்தலின்) எவராலாவது வஞ்சிக்கப்பட்டவனா யிருக்கின்றாய்.

33. இந்திரியங்கட்கு ஆத்மத் தன்மை கூறுவதில் தேக உன்மாதப் பிரசங்கம் வரும்; ஒவ்வொரு இந்திரியத்திற்கும் ஆத்மத் தன்மை நிச்சயித்திருக்கும் பக்ஷத்தில் ஸ்வாமி (ஆத்ம) நாநாத்தன்மைத் தோஷம் வருதலின். சமுதாய (எல்லா இந்திரியங்களும் சேர்ந்து அறிகிற) விஷயத்தில், குருடன், ஊமையன் நாசமாதல் வேண்டும். பார்க்கப்பட்ட, கேட்கப்பட்ட பதார்த்தங்களைச் சொல்லுதல் பொருந்துவ தில்லை. (புகன்ற இந்திரிய) சமுதாயமும் நிரூபிக்கப்பட வில்லை. (அங்ஙனமே ஸ்வப்நத்தில்) ஸ்வப்ந திருஷ்டா வில்லாமற் போவன். (அங்ஙனமே மரணத்திற் போன்று சயநத்திலும்) பய முண்டாம்; தூங்குதலிலும், மரித்தலிலும் சமாநமாதலின்.

34. பிராணன் ஆத்மா வன்று; ஜடமாதலின், அந்நத்தாற் பூசப்பட்டிருத்தலின், ஜல மய மாதலின், சுழுத்தியில் அதிகப் பிரவிருத்தி காணப்படுதலின். இந்தப் பிராணன் சஞ்சரிக்கும் காலத்தும் "நான் அசலன்" என்னும் ஞாந முண்டாகின்றமையின், சரீரத்தினின்றும், தான் வெளிப்போதற் பொருட்டுப் பிராணனை உத்பத்தி செய்ததாயும், மரண பரியந்தம்

இதன் காரணத்தினால் ஜீவ சப்த வாச்சியமாயும், தன தாலயமாகிய சரீரத்தினைப் பிராணனால் ரக்ஷிப்பதாயும், ஸ்வயம் பிரகாசமாயும், (அவஸ்தாத் திரயங்களிலும்) ஏகரசமாயும் உள்ள ஆத்மா பிராண னின்றும் அந் நியமா யிருக்கின்றது.

35. மநமும் ஆத்மா வன்று என்று நிச்சயிக்கப் பட்டது; உற்பத்திக்குச் சாதந மாகலின், அந்த விகார மாகலின், (மநம்) இருவிதமாக (சுத்தி அசுத்தியாக) விளங்குதலின், (அங்ஙனமே) பந்த மோக்ஷ காரண மாகலின், மநம் பின்னர்ச் சரீரத்தினைக் கவர்தலின், (தாதாத்மிய அத்தியாசத்தினால் ஆத்மாவிற்கு) மநோ மயத்தன்மை கேட்கப்படுதலின், சாக்கிர ஸ்வப்ந லய மான சுழுத்தியில் கரண சமூகம் லயமாகுங் காலத்தில் மநம் லய மடைதலின், சுழுத்தியினின்றும் எழுந்து ஜாக்கிரத்தில் சுழுத்தி, ஆண் டுள்ள சுகம் என்பவற் றின் ஸ்மரணத்தினாலும் (ஆத்மா வன்றாம்).

36. இந்தச் சரீரத்தில் நித்திய விஞ்ஞாநம் யாது அது மநதோடு சமமாம். மற்றும், (அது ஆத்மாவா மாயின்) நாநாத்மத்தன்மை யுண்டாம்; அந்த விஞ் ஞாநத்திற்கு அநேகாத்மத் தன்மை உளதாகலின், (விஞ்ஞாநத்தில்) தாதாத்மிய அத்தியாச காரணத்தினால் ஆத்மாவிற்குப் பந்தம் கேட்கப்படுதலினாலும், தனது ஆத்மாவிற்குப் போக மோக்ஷத்தின் பொருட்டுச் சரீரமாகிய ரதத்தில் விஞ்ஞாநத்திற்குச் சாரதித் தன் மை,யாது கற்பிக்கப்பட்டிருக்கின்றதோ (அதுவும்புத்தி ஆத்மாவின் பேதத்திற் காரணம்) ஆகலின், இந்த விஞ் ஞாநத்திற்குச் சாக்ஷியாயும், விஞ்ஞாநத்தோடு உப

ஷித ஸ்வரூபமாயும், சிந்மயமாயும், ஆநந்தமாயும் உள்ள ஆத்மா, (விஞ்ஞாநத்தினின்றும்) அந்நியமாக இருக்கின்றது.

37. சித்ஸ்வரூபமாய் அணு பரிமாண முடையது ஆத்மாவாயின், உன்னுடைய மதத்தில் சகல சரீரத்திலும் சைத்திய ஞாநம் உண்டாகலாகாது. வைதர்மியம் இல்லாதிருக்கின், சகல சரீரத்திலும் உள்ள சைத்தியம் (குளிர்ச்சி) முதலியவற்றைக் கவரும் கர்த்தாவாகிய இந்த ஆத்மாவினது போதமும், குணமும் (ஆத்மாவினின்றும்) அந்நியமாகா. (ஆத்ம ஞாநங்களின்) வைதர்மியத்தில் அணு ஆத்மாவினது சித்ரூபமான ஞாநம் சர்வ சரீரங்களிலும் எங்ஙனம் வியாபிக்கும்? அல்லது, ஆத்மாவிற்கு அணு பரிமாணம் உனக்கு எப்பிரமாணத்தினுற் சித்தமாயிற்று? (ரோமத்தின் நுனியில் நூறு கூறு என்பதாதி) சுருதிகளான் என்னற்க; எதனுல், அந்தச் சுருதிகள் ஆத்மாவின் அநந்தத் தன்மையில் நிஷ்டை யுடையன.

38. ஆத்மா ஒன்ருய்ச் சித் ஜடமாகிய விருத்தமான இருதன்மை ஆதல் பொருந்தாது. பின்னர், ஆத்மா தனக்குத் தானே விஷயமாகுதல் எவ்வாறும்? அந்தச் சித் அசித் ரூபங்களாய அம்சங்கள் எச் சொரூபங்கள்? (அவற்றிற்குச்) சம்பந்தம் யாது? அவ்வாறே ஆத்மா (அம்சங்களினின்றும் பிந்நமா? அபிந்நமா?). சேதநத்திற்குச் சடத்தன்மை எதன் பொருட்டு? எக் காரணத்தால் (அங்கீகரிக்கப்படுகின்றது)? ஆத்மாவின் கருத்திருத் தன்மை எவ்வாறுயது? அல்லது, (சுருதியில் நிஷ்கிரியத் தன்மையினுற் பிரசித்தமான) ஆத்மா கரண சமுதாயத்தினை எங்ஙனம் தரிக்கின்றது? (ஆக

லின்) அவிவேகித் தன்மையினுற் பசு சமானமான கிரியையிற் பொருந்தும் மீமாம்சகர்களால் ஜீவனது யதார்த்தத்வம் நிரூபித்தற் கசக்கியமாம்.

39. ஜீவர்கட்கு விபுத்தன்மை யிருக்குமாயின், சரீரம், யத்நம், கரணம், அதிருஷ்டம், சமானமாக இருத்தலின், போக வியவஸ்தை பொருந்தாது. எந்த ஹேதுவினுல், மநமும் (மூர்த்தமாகலின்) எல்லா ஆத்மாவோடும் சாங்கரிய (சம்யோக)ம் உண்டாம். சரீரோபாதிகளினுல் வியவஸ்தையினை நீ கூறுவாயாயின், நாநா ஆத்மத்தன்மை அப் பிரமாணமாம். எதனுல், ஆத்மாவினிடத்தில் பேதம் சித்திக்கினும், சித்திக்காவிடினும் கற்பிக்கப்பட்ட விசேஷங்கள் நிஷ்பலங்களேயாம்.

40. மற்றும், அவயவ மின்றிய ஆத்மாவினிடத்து, நிரவயவமான மநதினது சம்யோகம் சம்பவமன்று. திரவியம் நிரவயவ மன்று, நித்திய மன்று. ஞாநம் அதன் தர்ம மன்று. எதனுல் (ஜட தர்மத் தன்மையில்) ஞாநமும் ஜடமாம்?

41. (மற்றும், ஹே தார்க்கினே!) ஸ்வயம் ஜடஸ்வரூபமான நீ, சுழுத்தி ஞாநம், அஞ்ஞாநம், ஆத்மா அல்லது அக்கால சுகம் என்பனவற்றை (சுழுத்தியினின்றும்) விழித்தவனுய் எங்ஙனம் ஸ்மரிப்பாய், (அங்ஙனமே) அசாக்ஷி (யாகிய) நீ "இது" "இது" என்று அநேக எண்ணிக்கையையுடைய (தாராவாஹிக) அநேக ஞாநங்களை எந்த ஞாநத்தினுல் அறிவாய்? (எதனுல்) வெகு காலம் (நான் கடத்தினை) அறிந்தேன் (என்று கூறுகின்றுய்)?

42. ஜடம் ஆத்மா வன்றுகலின், அவற்றின் வேறுய், இச்சை முதலியவற்றிற்கும், உற்பத்தி நாசமாகிய

பரம்பரையை உடைய இந்தியங்கட்கும், பிராணன் கட்கும், மநங்கட்கும், புத்திக்கும் சாக்ஷியாய், நாச மின்றிய ஞாந ஸ்வரூபமாய், அவஸ்தாத் திரயத்திலும் சாக்ஷியாகச் சஞ்சரிப்பதாய் ஆத்மா இருக்கின்றது.

43. சூரியன், சந்திரன், அக்நி, வாக்குக்களின் பிரகாசம் நன்கு நிவிர்த்தியாகுமிடத்து, இந்திரிய சமூ கங்கள் லயமானவிடத்து, சுருதிகளாற், சங்க மின்றிய தாயும், ஸ்வயம் ஜோதியாயும், வெளிப்படுத்தப்பட்ட மித்தியார்த்தமாயும்,சித்ரூப தாதுவாயும் அந்த ராத்மா கூறப்பட்டிருக்கின்றது.

44. எது காணக் கூட்டத்தினுல் பாஹ்ய விஷ யங்களைப் பிரகாசிக்கின்றதோ, (எது) காணக் கூட்டத் தினை அந்தக்காணத்தினுல் பிரகாசிக்கின்றதோ, (எது) புத்தியை ஸ்வரூப சைதந்நியத்தினுல் நிரந்தரம் பிரகா சிக்கின்றதோ, (எது) வெளியிற் செல்லும் இக்காணங் களால் அறியப்படுகின்ற தில்லையோ, (எது) சரீரமாகிய கிரகத்தின் மத்தியி லுள்ள தீபமோ, இது (அதனை) ஆத்மா வென்று அறிக.

45. எது, வீடு, தநம், புத்திரன், ஸ்திரீ முதலிய வற்றினின்றும் அதிகப் பிரிய முடையதோ, எதன் (ஆத்மாவின்) பிரியத்தினுல் அந்நிய பதார்த்தங்களைப் பிரிய மென்று அங்கீகரிக்கப்படுகின்றதோ, (எது) பரார்த்தத்திற்கு முடிவிடமா யிருக்கின்றதோ, (எது) நீக்கப்பட்ட இதரார்த்த முடையதோ, (எது) சுக சமுத்திரமோ, அது அந்த ராத்மா வென்று நிச்சய மாக அறிக.

46. சுத்தமாய ஆத்மா, "நான் இது" என்னும் உபாதிகளின் தர்மங்களைப் பொய்யாகவே மோஹத்தி

ஞல் (தன்னிடத்து) அங்கீகரிக்கின்றது. ஜலத்திற் பிரதி பிம்பித்திருக்கின்ற சூரியனிடத்தில் ஜல சம்பந்த பேத தர்மங்களாய விருத்தி முதலியவற்றை (கற்பிப்பது) போல, (தனக்கும் உபாதிக்கும்) பரஸ்பரம் (தாதாத்மியமாக) ஆரோபஞ் செய்தலின்.

47. "நான் அஞ்ஞ யிருக்கின்றேன்" என்னும் அநுபவத்திஞல் சித்தனிடத்திருந்து சித்தினை விஷயஞ் செய்யும் உற்பத்தி யின்றிய அஞ்ஞாநம், சைதந்நியத்தினை மறைத்து, (அந்தச்) சைதந்நியத்தாலேயே விளங்குகின்றது. எங்ஙனம் ராகு சந்திரனை (மறைத்துச் சந்திரனாலே விளங்குகின்றது), மீண்டும், மித்தையாக ஜகத்தினை உண்டுபண்ணிப் பிரமிக்கின்றது. ஆ! ஆ! (அந்த அஞ்ஞாநம்) அநிர்வசநீயமாம்.

48. சித்தின் விளக்கத்தில் சித்தின் சாமர்த்தியம் போன்றும், பேதத்தின் விளக்கத்தில் பேதத்தின் சாமர்த்தியம் போன்றும், அஞ்ஞாநம் தனது, அந்நியத்தினது (காரிய) நிர்வாகத்தில் ஸ்வயம் சமர்த்துடையதாகின்றது. அசம்பவத்தினைச் செய்வதில் சாமர்த்தியமுடைய அம் மாயை, காரியத்திஞல் நன்கு மோஹத்தினைச் செய்கின்றது.

49. அறியப்படாத வஸ்துவாகிய அஃதின்றிய தன்கண் அப் புத்தி அத்தியாச மெனப்படும். (அஃதும்) "நான் அஞ்ஞன்" "நான் துர்ப்பலன்" "நான் நரன்" "நான் தரித்திரன்" என்றும், "என் புத்திரர்கள் எங்ஙனம் ஜீவிப்பார்கள்" என்றும் பிரத்தியகாத்மாவினிடத்தில் ஸ்பஷ்டமாக அநுபவிக்கப்படுகின்றது.

50. சரீரத்தில், "நான் சுத்தன்" "நான் சுகி" "நான் ஸ்திரன்" "நான் சேதநன்" என்று ஆத்ம

தர்மங்களை அத்தியாசஞ் செய்கின்றான். (அவ்வாறே) ஆத்மாவினிடத்தில், "நான் யௌவநன்" 'நான் ஸ்தூலன்" "நான் கௌரன்" "நான் சுந்தரன்" "நான் படு" என்று தேக தர்மங்களை அத்தியாசஞ் செய்கின்றான். (இவ்வாறு) பரஸ்பர அத்தியாசமாகிய சத்திய, மித்தைகளோடு கலப்புச் சொரூபமாகிய ஜீவன், அயப் பிண்டத்திற் பிரவேசித்த அக்கினி கொல்லன் அடை கல்லை அடித்த(லாற் பிராந்தியாகத் தோற்றுத)ல் போன்று, நாநாவித சம்சார சமூக அநர்த்தத்தினை அடைகின்றான். (படு-சமர்த்தன்).

51. ஒளி, இருளொப்ப விரோத மிருப்பினும் ஞாந ஞேயங்கட்கும், ஆத்மா அநாத்மாக்கட்கும், "நான்" "எனது" என்னும் அத்தியாசம் ஸ்பஷ்டமாக (எல்லாராலும்) அநுபவிக்கப்பட் டிருக்கின்றது. ஆதலின், இந்த அத்தியாசத்தில் வித்துவான்கட்கு அசம்பாவனை இன்று. ஸ்வப்நம் முதலியவற்றில் வேறு மார்க்க மின்மையினானும், ஆகாயத்தில் நீல நிறத் தன்மை அத்தியாசம் பார்க்கப்படுதலினானும் என்க. (வியவகாரத்தில்) வித்துவானுக்கும் பசு முதலியவற்றிற்கும் சமாநத்தன்மை யிருத்தலின் சர்வ வியவகாரமும் அத்தியாச காரணத்தானே ஆம் என்பது சித்தமாயிற்று.

52. ஜநங்கள், தர்மத்தினால் தேவத்தன்மையினை அடைகின்றனர்; பின் பாபங்களால் நரகத்தினை அடைகின்றனர். (அதனினின்றும் எஞ்சிய பாபங்களால்) ஸ்தாவராதி சரீரங்களை அடைந்து, மரித்து, அந்தப் புண்ணிய பாபங்களினால் ஒருகால் மநுஷ்ய சரீரத்தினை அடைகின்றனர், கர்ம, உபாசனைகளால் இரண்ய கர்ப்ப

லோகத்தினை அடைகின்றனர். ஆண்டு (வைராக்ய முற்ற) சிலர் மோக்ஷத்தினை அடைகின்றனர். போகேச்சை யுடையோர் மீண்டு மீண்டும் ஜந்மத்தை (பிரஹ்ம லோகத்தினின்று மீண்டு வந்து) அடைகின்றனர். இவ்வாறு விஷமமான சம்சாரத்தில் (ஜநங்கள் மீண்டு மீண்டும்) சுழலுகின்றனர்.

53. ஸ்வர்க்கத்தினின்று கீழே விழுங்கால் துக்கம். நகரத்தில் அநேகவித துக்கம். கர்ப்ப வாசத்தில் அதிதுக்கம். பால்யத்தில் ஸ்வாதந்திரிய மின்மையினாலும், போஜநத்தின் பொருட்டும், பாலக் கிரகஙாகிய ரோகத்தினாலும், அழுதலினாலும், துக்கமே. யௌவநத்தில் குரோதம், லோபம், விய்சநம், பராஜயம், சஞ்சலத்தன்மை, தரித்திரத்தன்மை முதலியன (உண்டாகின்றமையின்) துக்கமேயாம். விருத்தாவஸ்தையில் சோக, மோக இந்திரிய நாசங்களால் துக்கமே யாம். மரணத்தில் அதிதுக்கமாம்.

54. எந்தச் சீவன், அஞ்ஞாந சம்பந்தத்தினால் கர்ம பந்த முடையோனைச் சரீர ஆதீநமானவனைப் புகன்ற கிரமமாகச் சந்ம சமூகங்களால் சுழலுகின்றனனோ, (அவ்வாறே) துக்கத்தின் முடிவை அறிவதில்லையோ, ஜந்ம சமுகத்தினை ஸ்மரிப்ப தில்லையோ, அப் புருஷனை, வேதாந்த வாக்கியங்களும், சூத்திரம், பாஷ்யம் முதலியனவும் தனது ஆத்ம ராஜ்ஜியத்தில் அபிஷேகம் செய்வித்தற்குச் சர்வ அநர்த்த மூல நாச வாயிலாய்த் தாத்பரியத்தினாற் பிரவிர்த்தித் திருக்கின்றன.

அத்தியாரோபப் பிரகரண மென்னும்
முதற் பிரகரணம் முற்றிற்று.

இரண்டாவது பிரகரணம்.

1. உபாதாந நிமித்தத்தன்மை ரூப ஜகத் ஜந்மாதி காரணத் தன்மையாக, எந்த லக்ஷணம் முதற் பிரகரணத்தில் 17 வது சுலோகத்தில் கூறப்பட்டதோ, அவ் இவ் லக்ஷணம், சச்சிதாநந்த ரூபமாயும், சர்வ த்வைதங்க ளின்றியதாயும், மிக நுட்பமாயும், சத்திய ஞாநாதி என்னும் வேத மந்திரத்தினுற் கூறப்பட்டதாயும், எல்லா மந வாக்குகளையும் கடந்ததாயும், (பஞ்ச கோசக்) குகையி லிருப்பதாயும், தனததிஷ்டாந ரூபமாயு முள்ள பிரஹ்மத்தினைச், சாகை சந்திரனை (அறிவிப்பது) போன்று அறிவிக்கின்றது. லக்ஷயமும் இவ்வாறேயாம்.

2. கூடஸ்தமாயிருக்கும் பிரஹ்மம் ஜகத்தினை உண்டாக்குகின்றது, மாயை யின்றி உண்டாக்குகின்றதில்லை. அம் மாயை மித்தையாம்; அதனிட (மித்தையாகிய அர்த்த) த்தில் மாயா (சப்தப்) பிரசித்தியாகலானும், பிரஹ்ம ஞாநத்தினுல் அதன் நிவர்த்தி கேட்கப்படுதலினுனும் (என்க). அஃதே அவித்தையாம். பொய்ப் பொருளாயினும் (தனக் குசிதமான யுத்தாதி) காரிய சமர்த்தம் (புராணுதிகளில்) பிரசித்தமாம். மாயிகமாகலின் பிரபஞ்சம் பிரஹ்ம சைதந்யத்தின் விவர்த்தமாம்; மயிற் றூேகையின் காந்தி போன்று சிந்திக்கக் கூடாததாம்.

3. எக் காரணத்தினுல் ஜகத்து, சத்ரூபப் பிரஹ்மத்தினின்றும் வெளிப்பட்டிருக்கின்றதோ, பின், சத்ரூபப் பிரஹ்மத்தினுனே நிலைத்திருக்கின்றதோ, பின்,

சத்ரூபப் பிரஹ்மத்தின்கண் லயத்தினை அடைகின்றதோ, அக் காரணத்தினாலே சத்ரூபமேயாம். அற்பமான கட சராவாதி காரியம் மண்ணேயாவது போல சத்தினின்றும் வேறு ஒன்றும் இருப்ப தில்லை. சத்ரூபப் பிரஹ்மத்தினின்றும் (ஜகத்) பேதமா யிருக்கின் அசத்தாம். அற்றேல் சத்ரூபப் பிரஹ்மமயம் ஜகத்தாகுமாயின், (சமாதானம்) அப்பொழுது அற்பப் பேதமு மில்லை. பேத அபேதங்கள் விரோதங்களாம். அபிந்ந வஸ்துவினிடத்தில் பேத மிருப்ப தில்லை.

4. பிந்ந மின்றிய அபிந்ந வஸ்துவில் பிரதீதியாகும் பேதம், சந்திரனிடத்துத் தோற்றும் நாநாத் தன்மை போன்று பொய்யேயாம். வெவ் வேறா யிருக்கும் பிந்ந வஸ்துவில் பிரதீதியாகும் அபேதமும் அஃதேமானப் பொய்யேயாம்.(இது செய்மைக் கண்ணதாய மரங்களினிடத்து விளக்கமாம்). ஆகலின், (அபேக்ஷையின்றிச்) சுயமாக வஸ்து பேதம் இன்றாம். தர்மங்களாற் பேதம் சித்திக்குமாயின், ஆச்சரியம்! தர்மங்கட்குத் தர்மியினின்றும் பேத முண்டாதல் வேண்டும். (அஃதுண்டாவ தில்லை;கநக கடாதிகளின் அபேதமே பிரசித்தியா யிருத்தலின் என்க). லோகத்தில் பேதத்திலும்,அபேதத்திலும் தர்ம தர்மி வியவஸ்தை நிச்சயமாகப் பார்க்கப்பட வில்லை.

5. மற்றும், எது (கநகாதிகள்) ஸ்வயமாக அபிந்நமோ, அது வேறான் (குண்டல முதலியவற்) றால் பேத முடையதாகாது. அந்நிய பேதத்தால் அந்நியமும் பேத முடையதாவ தில்லை. மற்றும், தர்மங்கள் பரஸ்பரம் பிந்நங்கள் யாங்ஙனம்? தர்மி அபிந்நமாகலின் (தர்மங்கள்) அபிந்நங்களாம். பேதம்,பிந்நத்தினை ஆசிரயித்

திருப்ப தெனின், அதிகரண பேதமாம். (பேதாசிர யத்திலுள்ள பேதமாம்). நிரூபிக்கப்படும் அப் பேதத் தினனே (அதன் சித்தி) எனின், ஆத்மாசிரய தோஷ மாம். இன்றேல், அந்நியோந்யாசிரிய தோஷமாம். அல்லது, அநவஸ்தா தோஷமாம். ஆகலின், (ஆசிரயம் நிரூபிக்கப்படாமையின்), பேதமே நிரூபிக்க முடியா தாம்.

6. இப் பேதம் (யாவும்) பிந்ந தர்மிப் பிரதி யோகியினை விஷயமாக வுடைய ஞாந ஜந்ய ஞாந வேத் தியமாம். (ஆகவே) தர்மியாதிகட்குப் பேத சித்தியாம். மற்றும், மீண்டும் அங்ஙனமே யென அநவஸ்தை பிரா ப்தமாம். பேத பதார்த்தத்தில் தர்மி முதலியவற்றின் அபேதத்தினை அங்கீகரிக்கின், ஹரே! பேத புத்தி பொய்யாம் (பேத பதார்த்தத்தில் தர்மி முதலியவற் றினைப் பிரதியோகியாக வுடைய) பேதத்தினை அங்கீ கரிக்கின், முற்கூறிய ஆத்மாசிரய முதலிய தோஷங்க ளுண்டாம்; வேறு கதி யின்றாம். ஆகலின், பேதம் பொய்யேயாம்.

7. கூற வியலாத பேதத்தினுடைய பாவரூப சம்பந்தம் திரவியத்தினிடத்துப் பொருந்தாது. (சம்பந் தம் அபாவரூப மாயின்) அபாவரூப சம்பந்தம் (சம்பந் தியினின்றும்) வே றன்றாம்; சமமா யிருத்தலின், (அச்சம்பந்தம்) அவ்வவற்றின் (சம்பந்தி) ஸ்வரூபமு மன்று; இரண்டுங் கூடாமையின். பேதத்திற்கும், பேத ஆதாரத்திற்கும் பாவாபாவத்தினின்றும் வேறாய்ச் சம்பந்த ஸ்வரூப மிருப்ப தில்லை. அதனால், சுத்தியி னிடத்து ரஜதம் போன்று சம்பந்த மின்றி யிருப் பினும் பிரதீதியாகும் பேதம் பொய்யேயாம்.

8. சம்யோகாதி சம்பந்தம் பொருந்தாமையின் பேதம் இந்திரியங்கட்குங் கோசரமாகாது. சம்பந்தமின்றிய பேதத்திற்கு வியாப்தியும் பொருந்தாது. (பேதத்தில்) சாதிருசியம் பொருந்துவது மில்லை. வாக்கிய தாத்பரியமும் இன்றாம். அநுபலப்திப் பிரமாணமில்லை. இப் பேதத்தில் மீண்டும் வேறு (அர்த்தாபத்தி முதலிய) பிரமாண மில்லை. பிரமாண அவிஷயமாயினும் சர்வ அநுபவ சித்தமாய இப் பேதம், ஸ்வப்ந நகரம், நடனது மாயையிற் றோன்றும் நகரம், போன்று நன்கு மித்தையேயாம்.

9. (புத்தியினும்) வெளியி லுள்ள பொருள் புத்தி மாத்திரத்தினால் உண்டாவ தில்லை. அவ் விருமை முதலிய பதார்த்தங்கள் உத்பத்தியாய் வேறு புருஷர்கட்கு அறியப்படுவதாம். ஒன் றொன்றே யாயின் இரண்டன்றாம். கடாதி யிரண்டு சேர்ந்தது த்வித்வ விசிஷ்டம் என்னும் ஞாநம் பொய்யேயாம். த்வித்வ முதலியவற்றிற்குச் சங்கர தோஷ முண்டாம். உனக்குப் பிராகபாவ காரணத்தினால் வியவஸ்தை உண்டாகாதாம். அபேக்ஷா புத்தியினால் நிச்சயிக்கப்படுவ தில்லை. முன்னர்க் கூறிய எல்லாத் தோஷங்களும் பிருதக்த்வரூப பேதத்தில் மெதுவாகப் பொருத்தத் தக்கதாம்.

10. வேறாக அறியப்படாமையின், காரியம் உபாதாந காரணத்தினின்றும் (ஸ்வரூபமாகப்) பிந்ந மன்று. காரியத்திற்கு அந்நியத்தன்மை அங்கீகரிக்கின், உபாதாநகாரணத்திற்கு விலக்ஷணத்தன்மை பொருந்தாது. ஸ்வீகரிக்கப்படாத சமவாயத்தால் வியவஸ்தை பொருந்தாது. (காரணம் காரியரூபம்) எனின்; ஆயின், ஸ்வர்ணாதி காரியங்களில் இரு பங்கு கநமாதலின் விலை

அதிகமா மென்னும் பிரசங்கமாம். அவஸ்தையின் பேதத்தினுற் பேதமாயின், நிற்றல் ஓடல் என்னும் பேதத்தினுல் நரர்கள் பேத முடையவர்க ளாவார்கள்.

11. (மண்ணிற்கு) பிண்டாவஸ்தை, கடத்வங்கள் (இரண்டுள என) மநதில் (பேதமாகப்) பாவிக்கும் புருஷனுக்குக் காரண காரியபாவரூப புத்தி யுண்டாம். (இரண்டவஸ்தைகளினும்) புருஷனுக்கு எங்ஙனம் மண் ணென்றே வெளிப்படுகின்றதோ, (அங்ஙனம்) காரண காரிய பேதம் (தோற்றுவது) இல்லை. அவ்வாறே, மாயி, பிரபஞ்சங்கள் (இரண்டு என வேருக) மநதில் பாவிக்கும் புருஷனுக்கு, காரிய காரண பேதம் (தோற்றும். மாயி, பிரபஞ்சங்க ளென்னு மிரண்டினும்) ஒரு சத்ரூபத்தினைத் திடமாக அறியும் புருஷனுக்கு மாயியு (ஈசுவரனு) மில்லை, காரியமு மில்லை, (இவற்றின் பேதமு மில்லையாம்).

12. குடம் சத்து, குசூலம் சத்து, யாவும் சத்து, என்று (ஒரு ரூபமாக) யாது விளங்குகின்றதோ, மீண்டும் எது (சிருஷ்டிக்கு) முன்னர்ச் சுருதியில் நிரூபிக்கப்பட்டிருக்கின்றதோ, அந்தச் சத்திய வஸ்து, குடம், தாம்பாளம் முதலியவற்றில் மண் (விளங்குவது) போன்று, ஜகத்தினை வியாபித்து விளங்குகின்றது. ரஜ்ஜுவினிடத்துச் சர்ப்பம் போன்று சத்ரூபப் பிரஹ்மத்தில் சர்வ ஜகத்தும் கற்பிதமாம். (ஆகலின்), அதிஷ்டாந ஸ்வரூபமாகலின் பிரஹ்மமேயாம். சத்ரூபப் பிரஹ்மத்தினின்றும் வேறு யிருக்குமாயின், இவ்வெல்லாச் சகத்தும் அசத்தாம். (வேறு மார்க்க மின்மையால்) அபேதத்தில் பிரஹ்மமேயாம்.

13. வாங்கல் கொடுத்தல் முதலியவற்றிற்கு யோக்கியமான வெள்ளி முதலியவற்றிலும், கிளிஞ்சில் வெள்ளி முதலியவற்றிலும் விளங்கும் பிரஹ்மசத்தை யொன்றேயாம். (அங்ஙனமாயினும்) முதலாவதாய யோக்கியமான வெள்ளியில் பிரஹ்ம சாக்ஷாத்கார பரியந்தம் இந்தச் சகத்துச் சத்தியம் என்னும் பிரதீதியினை உண்டாக்குகின்றது. இரண்டாவதாய கிளிஞ்சில் வெள்ளி முதலியவற்றில்("இது ரஜதம்"என்னும்)பிரதீதி பரியந்தமே(இது சத்தியம் என்னும் பிரதீதியினை உண்டாக்குகின்றது); வஸ்திரத்திலும், ஸ்படிகத்தின் காரியமான குண்டிகை முதலியவற்றிலும் பிரதீதியாகும் * மஞ்சிஷ்ட சம்பந்தி ரக்த ரூபம் போன்று. (எங்ஙனம் உண்மையாக ரக்த ரூபம் மஞ்சிஷ்ட அவயவத்தி லிருப்பினும், வஸ்திரத்தில்) "சிவப்பு வஸ்திரம்" (என்னும் ஞானம்) மித்தை யன்று. (பின்னரோ) சத்தியமேயாம். ஸ்படிக காரியமான குண்டிகை முதலியவற்றில் "சிவப்பு வலம்" என்னும் ஞானம் மித்தையாம். இவ்வாறு (உணர்க).

14. சச்சிதாநந்தங்கட்கு ஏகத்தன்மை யிருப்பினும், அநிருத ஜட மஹாதுக்க மோஹங்கள் இன்மையால் "சத்தியம் ஞானம் அநந்தம் பிரஹ்மம்" என்னும் வாக்கியத்தினால் (போத்திய போதக ரூப) வியவகார விஷயத்தில், சத்தியத்தன்மை, ஞானத்தன்மை, ஆநந்தத்தன்மை ரூப பேதங் கற்பிக்கப்படுமிடத்தில் சுக்தியின்கண் இதம் அம்சம் போன்று கற்பிதமாகிய ஜகத் பதார்த்தத்தோடு வியாப்தமான சத்தை, சமான ரூபமாக விளங்குகின்றது. சுக்தித் தன்மை போன்று மாயையினால் மறைப்புண் டிருத்தலின், சித்துத் தன்மை, ஆநந்தத் தன்மைகள் விளங்க வில்லை.

---

* சிவப்புவர்ண பீஜமுடைய செடி.

15. இந்தக் கூட்டத்தில் ராஜா யார் எனக் கேட்குமிடத்து, மத முடைக் கஜத்தின்மேல், முத்து மாலை ரூபமாய்ப் பற்றுக் கோடாகவுடைய வலைமத்தியில் சந்திரன் (போன்று) வெண்மையாக விளங்கும் குடையின் கீழ் (சிறந்த வஸ்திரம் ஆபரணம் முதலியவற்றோடு) விளங்குவோன் யாவனோ அவனே (ராஜா) என்று கூறின், (கேட்டோன்) எல்லா விசேஷணங்களையும் விட்டுப் புருஷ விசேஷ ஒருவனை "இவன் ராஜா" என அப்போழ்தே அறிவன். (விசேஷணத்தோடு கூட உணரமாட்டான்). எக் காரணத்தால், (வேறு காலத்தில்) வேறு விதமாக இந்த ராஜாவைப் பார்த்து எவனை முன் பார்த்தோம் அவனே இந்த ராஜா வென அறிவன்.

16. கேட்போனது அறியவேண்டும் என்னு மிச்சை, கூறுவோனது தாத்பரியங்களின் அநுசாரமாகிய காரணத்தினால், முன்னர்க் கூறிய புருஷ விசேஷத்தினைப் போன்று லக்ஷணவாக்கியங்கள் கூறப்பட்டிருக்கின்றன. (அங்ஙனமே) ஜகத் உத்பத்தி விஷய வேத வாக்கியங்கள், மாயை, அதன் காரியங்கள் கடந்த சித்மூர்த்தியாகிய பரப் பிரஹ்மத்தினைக் கூறுகின்றன.

17. தத்தவமசி மஹா வாக்கியத்தி லுள்ள, தத்த்வம் பதார்த்தங்கள்போன்று ஈண்டுச் சிருஷ்டி வாக்கியத்தில், அந்நுவய அநுபபத்தியும் இன்று; அபிந்ந பதார்த்தத்தினை அறிவிக்கும் சமாந வேற்றுமையுமின்று. ஆகலின், பதங்களில் லக்ஷணை இல்லை. அங்ஙனமாயினும், பேத சம்பந்தத்தினாற் பரஸ்பரம் கொண்டுகூட் டுடைய சர்வ சிருஷ்டி வாக்கியங்களும் அபிந்ந நிமித்த உபாதாந ரூப ஒரு காரணப்

பொருளைப் பிரதிபாதித்தலினால் ஏக வாக்கியத் தன்மையினை அடைந்து சத்திய சித் ரூபமாயும் அத்வயமாயு முள்ள பிரஹ்மத்தினைக் கூறுகின்றன. எதனால், உபக்கிரம உபசம்ஹாரம் முதலியவற்றின் அநுசாரத்தினால் கூறிய பிரஹ்ம பரங்கள் அவ் வாக்கியங்கள். (ஆகவே வாக்கியத்தில் லக்ஷணை சம்பவிக்கின்றது).

18. பிரத்தியக்ஷாதிப் பாஹ்யப் பிரமாணங்களால் நன்கு விருத்தி யடைந்த துவைதப் பிராந்தி விழிக்குங்கால் சீக்கிரம் அத்வைதத்தினைப் போதிப்பதில் சாமர்த்திய மின்றி யிருக்குங்கால் சுருதி, உத்பத்திப் பிரளய ரூபப் பிரக்கிரியையை; இந்த வியவகார வஸ்துக்கள் யாவும் மித்தை யென்னும் அபிப்பிராயத்தினாற் சிருஷ்டித்தது.

19. (உபக்கிரமத்தில்) சத் சித் ஆநந்தம் பிரஹ்மம் எனக் கூறி,(உபசம்ஹாரத்தில்) ஏகம்,எல்லா லெளகிக வைதீக வாக்குகளையும்,எல்லாருடைய மநத்தினையும் கடந்திருக்கின்றது பிரஹ்மம் எனக் கூறி, (மத்தியில்) பஞ்சகோசக் குகை மத்தியில் இருப்பது பிரஹ்மம் என அப்பியாசத்தினாற் கூறி, கேவலம் உபநிஷத் ஒன்றானே அறியத்தக்கதெனக் கூறி, பிரஹ்மம் சத்திய மித்தியா (மெய்யான பொய்) ரூப ஜகத்தினை உத்பத்தி செய்து, புகன்ற இரு ரூபமாக (சத்தை கொடுத்தல் வாயிலாக) வியாபித்து, ஸ்வயம் (பிரஹ்மம்) சத்தியம் என்று கூறும் சுபாவ முடைய (பிரஹ்ம வல்லியாகிய) சுருதி, ஸ்பஷ்டமாக அத்வைதத்தினைக் கூறுகின்றது.

20. பிரஹ்ம ஞாநி மோக்ஷத்தினை அடைகின்றான். பிரஹ்மமோ சத் சித் அத்வய லக்ஷணமாம்.

ஞானமோ (சாக்ஷி ரூபமாகப் புத்தியாகிய) குகையின் மத்தியிலுள்ள பிரத்தியக் காத்மாவிற்கு நிஜரூபப் பிரஹ்மப் பிராப்தியின் பொருட்டாம் எனக் கூறிச் சுருதியானது, தான் கூறிய சத்தியத் தன்மை, அத்வயத் தன்மைகளை நிரூபித்தற் பொருட்டு இந்தச் சகத் உத்பத்திப் பிரக்கிரியையைக் கூறிற்று. வேறு வழித்தாய் நிரபேக்ஷ சத்தியத் தன்மை முதலியவற்றின் சமர்த்தநம் பொருந்தாது.

21. (சிருஷ்டிக்குப்) பூர்வம் ஒரு ஆத்மாவேயிருந்தது; வேறு இல்லை. அவ் வாத்மா எல்லாச் சகத்தினையும்பார்த்து (இவ்வாறு செய்யத்தக்கதென்று மாயையினால் அநுசந்தாநம் செய்து) இந்தச் சகத்தினைச் சிருஷ்டித்தது; (அதன் பின்) பிரத்தியக் காத்மரூப மாகச் சரீரத்திற் பிரவேசித்து மூன்று (அவஸ்தா ரூப) ஸ்வப்நத்தினைப் பார்த்தது; சரீர உபாதியினையுடைய அவ் வாத்மா, (குரு உபதேசித்த) விசாரத்தினால் சிதாத்ம ஸ்வரூபத்தினை அறிவிக்கும் ஜாக்கிராவஸ்தையினை அடைந்து, தனது ஸ்வரூபமாகவே சர்வேச்சைகளையும் அடைந்து மரண மின்மையினை அடைந்தது (என்று கூறும் சுருதியும் பிரஹ்மத்தி னிடத்துத் தாத்பரிய முடைய தென்பது வெளிப் படையாம்).

22. பிருதிவி முதலிய மூன்று தூலம் மூர்த்தம், வாயு ஆகாய மிரண்டு சூக்ஷ்மம் அமூர்த்தம் என்று சர்வஜகத்தினையும் மூர்த்த ஸ்தூல, அமூர்த்த சூக்ஷ்ம விபாகத்தினால், காண்வ, மாத்தி யந்திந சாகையாகிய சுருதியும் பிரஹ்மத்திற்கு இருவித ரூபத்தினை அத்தியாரோபஞ்செய்து அநந்தரம் ஈதன்று ஈதன்று என்று எவ்விதத்தானும் இருவித ரூபத்தினை நிஷேதித்து,

(அதிஷ்டானமான சிந் மாத்திரத்தினை) உபதேசஞ் செய்து அத்வயத்தினைச் சேஷமாக்கிற்று.

23. எதன் ஞானத்தினால் இந்தச் சர்வ ஜகத்தும் அறியப்பட்டதாகின்றதோ, அதனைக் கூறுதற்கு உபநிஷத்தில், "ஹே ஸௌமிய! சத்தே (யிருந்தது) என்னும் வாக்கியம் (எக்காரணத்தினால்) ஆரம்பிக்கப் பட்டதோ, அக்காரணத்தினாலேயே ஞானத்தோடு கூடிய தின் உத்பத்தியும், கூறிய வாக்கியத்தினாற் பிரதிஞ்ஞை செய்த ஏகத் தன்மையின் அபிப்பிராயத்தினாலேயே புகன்ற உபநிஷத்திற் புகன்ற மட் பிண்டம் முதலிய திருஷ்டாந்தங்களும், அந்தக் கிரமத்தானே (தார்ஷ்டாந்தத்தோடு) சமந்வயத்தினை அடைகின்றன.

24. இந்தச் செகத்துச் சத் ரூபப் பிரஹ்மத்தினின்றுமுண்டாயிற்று; சத் ரூபப் பிரஹ்மத்திலிருக்கின்றது; சத் ரூபப் பிரஹ்மத்தினிடத்தே லயத்தினை அடைகின்றது. (ஆகலின்) ஸ்வயம் சத்தையின்மையின் யாவும் காரண சத்தா ரூபமே. காரண சத்தையினின்று அந்நியம் யாவும் மித்தையே (என்று உத்தரக் கிரந்தத்திற் கூறப்பட்டிருக்கின்றது). கற்பிதம் பிருதக் சத் ஆக மாட்டாது; மரு பூமியினின்றும் கானற் ஜலம் வேறாகாது போன்று. ஆகலின், சத் வஸ்து அத்வயமே என்பது சிருஷ்டிவாக்கியத்தின் தாத்பரியமாம்.

25. சர்வ தர்மங்களும் இன்றியதாய் அக்ஷரத்தினும் சூக்ஷ்மமாய (வஸ்துவினைப்) பர வித்தையினால் அறியத் தக்கதென்று அதர்வணோபநிஷத் ஆரம்பத்திற் கூறி, நிர்விகாரப் பிரஹ்மத்தினின்றும் சர்வ ஜகத்தும் உத்பத்தியாகின்றது;(அது)பொய்யே(என்று பிருதிவி முதலிய திருஷ்டாந்தங்களாற் கூறுகின்றது)

ஞேயப் பிரஹ்மமே சத்தியமாம் என்று ஸ்பஷ்டமாக அதிஷ்டானத் தன்மையினால் நிரூபித்துக் கேவல ஞான மாத்திரத்தினால் ஸ்வயம் அந்தப் பிரஹமம் அறிபவனாகின்றது என நித்தியம் அடைந்த பிரஹ்ம ஸ்வரூபத்தினையே நான்காவது வேதம் கூறிற்று. (ஆகவின், அத்வைத தாத்பரிய முடையதே யாம்).

26. பூத பவிஷ்ய வர்த்தமான கால முடைய ஜகத்திற்கு, உத்கிருஷ்ட சத் ரூபமாயும், வாச்சிய வாசக பேத மின்றிய தாயும் உள்ள காரணத்தைப் பிரணவ ரூபமாகக் கூறி, நான்கு பாதங்களாற் பாகஞ் செய்து, முன் முற் பாதங்களைப் பிற் பிற் பாதங்களில் லயஞ் செய்து, த்வைத மின்றிய தாயும், பரமானந்த ரூபமாயும், லக்ஷண மின்றிய தாயும் உள்ள நான்காவது பாதத்தைத் தன தாத்மாவினது யதார்த்த ரூபமாக அதர்வண சுருதி கூறிற்று.

27. கூறிய வாற்றானே ஆண்டாண்டு (வேதாந்தத்தில்) கேட்கப்பட்ட சிருஷ்டி வாக்கிய சமூகங்களைப் பிரகரணரூப உபக்கிரமம் முதலிய விசாரத்தினாலும் (பூர்வாசாரியர்களது) யுக்திகளாலும், வேறு சுருதிகளாலும் சத்ரூப அத்வைதத்தோடு தாத்பரியத்தினாற் சேர்க்குக. முற்புகன்ற தடஸ்த லக்ஷணத்தின் சுருக்கம் இவ்வளவினதேயாம். தடஸ்த லக்ஷணத்தின் பலத்திலோ, லக்ஷயப் பிரஹ்மத்தின் சத்தியத் தன்மை, பரிச்சின்னத்திரயங்கள் நிவாரணங்களாம்.

28. இந்தப் பிரஹ்மத்திற்கு, சத் சித் அத்வய ஆனந்தரூபம் ஸ்வரூப லக்ஷணமாம். சத்திய அபரோக்ஷ சுக பின்ன வஸ்துவினிடத்தில் புருஷ இச்சைக்கு விஷயமாந்தன்மை இல்லை. ஆகவின், (பிரஹ்மத்திற்கு)

சத்திய ஞானாதி ஸ்வரூபத்தன்மை (சுருதியிற் கூறப்பட்டிருக்கின்றது).ஏகரசத்தன்மைக்கு, கற்பித பேதத்தினல், அவகாசத்தினை அடைந்த நிஷேதிக்க யோக்கியமான அசத்தியத்தன்மை முதலியவற்றால் நாசம் உண்டாகாது. எதனல், அவ்வாறே நன்கு 14-வது சுலோகத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

29. அந்தப் பிரஹ்மத்திற்குச் சூக்ஷ்மத்தன்மை யிருத்தலினலும், ஆகாயத்திற்குப் பொய்யான நீல்ரூப ஆதாரத்தன்மையாற் சத்தியத் தன்மை இருப்பதுபோன்று, ஜகத்ரூப நிலத்தன்மையின் அதிஷ்டானத்தன்மை யிருத்தலினலும், வியாவிருத்தியின்மையினலும், யாண்டும் ஆதேயத்தன்மை யின்மையினலும், எல்லா வஸ்துவின் ஞான ரூபமா யிருத்தலினலும், (அநவஸ்தையின் பயத்தால்) எல்லாவற்றின் பாதத்திற்கும் பிரஹ்மம் அவதியா யிருத்தலினலும், அசங்கத்தன்மைக்குப் பிரஹ்மத்திலுள்ள சத்தியத்தன்மையோடு விரோத மின்மையினலும், சர்வ சம்பந்தத் தன்மையினலும், (காலம் முதலிய எல்லாவற்றிற்கும்) ஆத்மாவா யிருத்தலினலும், சாக்ஷித்தன்மை யிருத்தலினலும், (சுருதியால்) வேறு திருஷ்டா நிஷேதிக்கப்படுதலினலும், (சத்திய பத முடைய) வெளிப்படையான நூறு சுருதி வசநங்களினலும், தத்துவ வித்துக்களின் அநுபூதியினலும் சத்தியத்தன்மை சித்தமாம்.

30. (சுருதிகளிற் பிரஹ்மத்தின்கண்) ஆத்மத்தன்மை கூறியிருத்தலினலும், ஈக்ஷித்ருத்தன்மை கூறியிருத்தலினலும், எல்லாவற்றையும் வசம் செய்யும் தன்மையினலும், உபநிஷத் தொன்றானே அறியுந்தன்மை கூறியிருத்தலினலும், சிருஷ்டிக்கவேண்டும்

என்னும் இச்சா விஷயக ஜநக சங்கல்ப ரூப தியாக உப தேசத்தாலும், சந்திரன் சூரியன் அக்கினி முதலியவற் றினைப் பிரகாசிக்குந்தன்மை கூறப்படுதலினாலும், நேரே அபரோக்ஷமாதலினாலும், புண்ணிய பாபகர்மங் களின் பிரேரகத்தன்மையும், திருஷ்டிருத்தன்மையுங் கூறப்பட்டிருத்தலினாலும், சர்வஞ்ஞத்தன்மை, ஞத் (அறியுந்)தன்மை முதலிய சப்தங்களினாலும், ஸ்பஷ்ட மான நூறு வசநங்களினாலும் சத்ரூபப் பிரஹ்மம் சித் ஸ்வபாவமாம்.

31. ஆநந்தத்தன்மையின் அதிகத்திற்கு முடி விடமாகலினாலும், எல்லாச் சுக லேசங்கட்கும் சமுத் திரத்தன்மை கூறும் சுருதிகளாலும், முக்தர்களால் அடையப்படுந்தன்மை கூறுதலினாலும், நிரதிசய அநந்தாநந்த ரூபத்தன்மையினாலும், எல்லாவற்றிற்கும் உள்ளிருக்குந் தன்மை கூறப்படுதலினாலும், நிதி, கூடு, ஸ்திரீ சமான மெனக் கூறியிருத்தலினாலும், சுழுத்தி ஆநந்தத்தில் பிரஹ்மத்தன்மை கூறியிருத் தலினாலும், (ஆநந்தத்தினைச் செய்யும்) ரசத்தன்மை கூறியிருத்தலினாலும் அந்தப் பிரஹ்மம் சதா ஆநந்த ரூபமாம்.

32. ஈண்டு சத் சித் சுக ஏக ரஸத்தன்மை லக்ஷ ணம் யாது பிரஹ்மத்திற்குக் கூறப்பட்டதோ, அது ஜீவ சம்பந்தி (சர்வாந்தர சர்வ சாக்ஷி) பிரத்தியக்காத் மாவிலும் சமமாம். சர்வாவஸ்தையின் சாக்ஷியாகிய அதற்குப் பாதம்(விகாரம்)முதலியன பொருந்தாமையி னாலும்,முக்கியப் பிரியத்திற் கிடமாகலினாலும்,உபாதி பேதத்தினால் வஸ்து பேதஞ் சித்தியாமையினாலும், பிரஹ்ம அம்சத் தன்மை கூறி யிருத்தலினாலும்,

தேஹேந்திரிய திருஷ்டாவிற்குச் சொப்பிரகாசத் தன்மை யிருத்தலினுலும் (என்க).

33. எதனுல் (ஜாக்கிராவஸ்தையில்) பாதிக்கப் படும் ஸ்வப்ந பதார்த்தங்களோடு கூட பாதிக்கப் படுந் தன்மை (பிரத்தியகாத்மாவிற்குப்) பார்க்கப்ப டவில்லை. திருக் ரூப மான தான் பாதத்தினை அறிவதா யிருந்து கொண்டு தனது பாதத்தினை எது போன்று அறியும்? எதனுல், வேறு திருக் கிருப்பதில் பிரமாண மில்லை. (திருக்குத் தன்மையினுற்) சமானமான திருக்கு, வேறு திருக்கிற்கு விஷயமாதல் எதனுல் பொருந்தாது. எதனுல் ஆத்மா நிர்விகாரமோ, அதனுல் அபரிச்சிந்நமாம். இந்தப் பிரத்தியக் காத்மா சத் ஸ்வரூபமாம்.

34. எதனுல் பிந்ந பிந்நமான பால்யம் முதலிய அவஸ்தைகளில் "நான் நான்" என ஏக ரூபமாக விளங்குகின்றதோ, எதனுல் இந்திரியங்கள் லீநமாயினும் ஸ்வரூபப் பிரகாசத்தினுல் ஜாக்கிர பதார்த்தங்களைப் போன்று பிரத்தியக்ஷமாக அறிகின்றதோ, எதனுல் அஹங்காரம் லயமாயினும் நாச மின்றிய சித்ரூபமோ, சுழுத்திக்கும், சுழுத்திச் சுக ஞாநத்திற்கும் சாக்ஷியோ, (எதனுல்) திருஷ்டாவின் திருஷ்டிக்கு லோப மின்மையில் சுருதியும் (இருக்கின்றதோ), அதனுல் பிரத்தியக் காத்மா ஞாந ரூபமாம்.

35. எதனுல் ஆத்மாவிற்கு அந்நியமான வஸ்து பிரியம் எனக் கூறும் உன்னை அது நாசஞ் செய்யும் என்று (சுருதி) கூறுகின்றதோ, எதனுல் சுழுத்தியில் ஆநந்த சம்வித் ரூப ஈசுவரனுகிய பிராஞ்ஞனோடு ஏகத்

தன்மையைச் (சுருதி) கூறுகின்றதோ, எதனுல் மூன்று லோகத்திலும் தனது அநுகூல பதார்த்தங்களில் இச்சையும், தனது பிரதிகூல பதார்த்தங்களில் தியாக இச்சையாகிய துவேஷமும் பிரசித்தமோ, எதனுல் எப்பொழுதும் நான் இருக்க வேண்டும் என இச்சிக்கப் படுகின்றதோ, அதனுல், பிரத்தியக்காத்மா சுக ஸ்வரூபமாம்.

36. இவ்வாறு சுருதி குரு வசநங்களாலும், யுக்திகளாலும், அநுபூதியாலும் நிரந்தரம் விசாரிக்குமிடத்து, ஜீவேஶ்வர ஸ்வரூபங்கள் ஸ்வரூப லக்ஷண ஏகத்தன்மை யுடையன எனத் திடமாக நிச்சயிக்குங்கால், உபக்கிரம உபசம்மாரங்களால் நிச்சயிக்கப் பட்ட அபிப்பிராய முடையு தத்த்வமசி முதலிய மஹா வாக்கியங்கள், சீக்கிரம் தம தர்த்தத்தினை நிச்சயித்தற்குச் சமர்த்த மாகின்றன.

37. சிருஷ்டிக்குப் பூர்வம் எந்தச் சத் வஸ்து இருந்ததோ, பின் எது, அக்நி முதலியவற்றைச் சிருஷ்டித்ததோ, தான் சிருஷ்டித்ததில் பிரவேசித்து யாது ஜீவரூபமா யிருக்கின்றதோ, எது மித்தையாகச் சகல நாம ரூபங்களையும் சிருஷ்டித்ததோ, அந்தச் சத்ரூபப் பிரஹ்மம் தத் சப்தத்தினுல் அறியத்தக்கதாம். நீ என்னும் பதத்தினுல் சுவேத கேது வென்னும் பெயரினை யுடைய ஜீவன் கூறப்படுகின்றான். அசி பதம் நித்திய சித்தமான வாக்கியார்த்தத்தினை அறிவித்து வர்த்தமன அர்த்தத்தினைக் கூறுகின்றது.

38. (சமாந வேற்றுமையினை யுடைய) நாமங்களின் சாமாநாதிகரண்யம் (ஏகத் தன்மை) பாதம்,

அத்தியாசம், விசேஷணம், ஐக்கியம் என நான்கு வகைத்தாக அங்கீகாரமாம். (அவற்றுள்) முதலது பொருந்தாது; சுருதியின் முயற்சி வியர்த்தமாம். தியாநம் முதலியன கேட்கப்படாமையானும், அநித்திய பலத்தன்மைத் தோஷத்தினுலும், அத்தியாச புத்தி பொருந்தாது. விருத்த பதார்த்தங்கட்கு விசேஷண, விசேஷிய பாவம் பொருந்தாது. ஆகலின், வலுவால் வஸ்துவின் ஏகத் தன்மைப் பக்ஷமே நிலைத்தலாம்.

39. வாக்கியத்தில் (தத் த்வம் பதங்கட்கு) வாச்சியார்த்தம் பரஸ்பரம் அந்வய முடையதாகாது; ஏதனுல் விருத்த தர்மத்தோடுகூடிய வஸ்து இரண்டு அபேதத்தினை அடையமாட்டாது, மோக்ஷ உபயோகமின்மையினுலும், மூலம் பொருந்தாமையானும், லக்ஷணையும் பரஸ்பரம் கூடிய பொருளில் பொருந்தாது.

40. (கங்கையிற் கோஷம் என்னும் வாக்கியத்தில்) மூன்றுவது பதார்த்தம் கரை போன்று, மகாவாக்கியத்தில் அந்நுவய யோக்கியமாய் வாச்சிய சம்பந்தி மூன்றுவது பதார்த்தம் பிரசித்தமா யில்லை. இரு பதங்களில், ஒரு பதத்தில் லக்ஷணையினை நிச்சயிப்பதில் லிங்கம் இல்லை; பொருந்துவது மில்லை.

41. ஜீவனுக்கு, ஈஶ்வர சதிருசம் (பிரசித்த ரூபத்தினின்றும்) வேறு நிஜ ரூபம் பிரமாணத்தினுற் சித்திப்ப தில்லை. மேல் உண்டாம் பதார்த்தத்திற்கு இருப்புத் தன்மை யில்லை. கேட்டவற்றை விடுதலும், கேளாதவற்றைக் கற்பித்தலும் உசித மில்லை. ஆகலின், தத் த்வம் பதங்கட்குப் பாக (த் தியாக) லக்ஷணையே உசிதமாம்.

42. சோயம் (தேவதத்தன்) என்னும் வாக்கியம் போன்று, தத் த்வம் பதார்த்தங்களில் விரோதியான சர்வஞ்ஞத் தன்மை கிஞ்சிஞ்ஞத் தன்மைத் தர்மங்களை நிவர்த்தித்து, சரீர புத்திகளுக்குச் சாக்ஷி (யாகிய சிந்மாத்திர பாகத்தினை த்வம் பதத்தினால்) உபலக்ஷித்து, சத் அநந்த சித் மூர்த்தி (பாகத்தினைத் தத் பதத்தினால்) உபலக்ஷித்துப் பின் (லக்ஷிக்கப்பட்ட) அகண்டார்த்த விஷயத்தில் வாக்கிய ரூப இருபதங்களையும் பொருத்துக.

43. தத்வ பத லக்ஷியத்தில் (சுரோதாவிற் குண்டாய) பரோக்ஷத் தன்மை, அடையாத் தன்மைப் புத்திகளை நிவர்த்தித்தற்கு (த்வம் பதத்தை அபேக்ஷிக்கின்றது). த்வம் பத லக்ஷியத்தில் (பிரதீதியாம்) அபூர்ணத் தன்மை, துக்கித் தன்மை ரூபப் பிராந்திகளை நிவர்த்தித்தற்கு (தத் பதத்தினை அபேக்ஷிக்கின்றது. பரஸ்பர லக்ஷிய அபேத வாயிலாகக் கூறிய பலத்தின் பொருட்டும்) அலௌகிக நிஜ ஆத்ம ஸ்வரூபத்தினைக் கூறுதற்கும் (தத் த்வம்) பதங்கள் பரஸ்பரம் அபேக்ஷை யுடையனவே.

44. ஈண்டுப் பதங்கட்கு அகண்டார்த்தத் தன்மை, வேறு சம்பந்தம் இன்றிய நித்தியத் தன்மையாம். அல்லது, ஜாதி குணாதி அந்நிய வஸ்து சம்பந்த மின்மையாம். எதனால், கூறிய அகண்டார்த்தத் தன்மை "மிகுந்த பிரகாசன் சந்திரன்" என்னும் வாக்கியத்திற் பிரசித்தமாம்; (எதனாலெனில், கேட்போனது இச்சையின், கூறுவோனது தாத்பரியத்தின் அநுபவத்தினால்) சந்திரன் மாத்திரத்தினைப் போதித்தலின்.

45. மிகுதி, பிரகாசத் தன்மை, சந்திரத்தன்மைகளின் சம்பந்தம், சம்பந்த மின்மை, பேதம் முதலியன வினவப்பட வில்லை. வினவப் படாத பொருளில் சாப்த போத முண்டாவ தில்லை. ஆகலின், (கூறிய) வாக்கியத்தினுற் சந்திரன் மாத்திரம் போதமாம்.

46. எந்தப் பரமாத்மா சிருஷ்டியின் முதலில் புவநத்தினைச் சிருஷ்டித்துச் சர்வ சரீரங்களிலும் பிரவேசித்தது. எந்தப் பரமாத்மா பஞ்சபூதம், தேவ, மநுஷ்ய பசுவாதி ரூபமாம். எந்தப் பிரத்தியக் சைதந்ய நிமித்த மாத்திரத்தினுல் (இந்திரிய அந்தக்கரணங்களால்) தரிசந வசந அபிமாநங்க ளாகின்றன. ஸ்வரூப ஞாந மாத்திரத்தினை ஐஸ்வரியமாகவுடைய நான் பரமாத்மாவோடு அபிந்நமே.

47. எந்தப் பிரஹ்மம் தமப்பிரதாந மாயையினுல் நாநாவித ஆகாரமாக, ஜகத்தா யிருக்கின்றதோ, எந்தப் பிரஹ்மம் சர்வாத்மகமா யிருந்தும், நகநுனிவரைப் பிரவேசித்த சரீர முடையதா யிருந்தும் (அஞ்ஞாநத்தினுல்) பரிச்சிந்நமா யிருக்கின்றது; (ஆகலின்) அந்தப் பரப் பிரஹ்மமே மிகுந்த பிரியத்திற் கிடமான பிரத்தியக்காத்ம ரூபமாம். (இதனுல்) உண்மையாக அகம் பிரஹ்மாஸ்மி (என்னும் வாக்கியம்) பிரஹ்மத்தினையே அறிவிக்கின்றது. (எதனுல்) பிரஹ்மமே எல்லாமாம்.

48. புருஷனிடத்தில், பஞ்சகோசக் குகை மத்தியில், எவ்விவ் வாத்மா (சாக்ஷி ரூபத்தினுல்) பிரகாசிக்கின்றதோ, சூரிய மண்டலத்தில் எந்த அநந்தாநந்த கனமான பரமாத்மா பிரகாசிக்கின்றதோ, அது ஏகம்

என்று ஸ்பஷ்டமாக ஐக்கியத்தினை ஓரிடத்தில் (தைத்திரீயம்) கூறுகின்றது. ஏகாத்ம சாக்ஷாத்காரத்தினால் ஆத்மாவின் கண்ணே ஜகத்திற்கு லயத்தினையும் கூறுகின்றது.

49. (ஹே! சுவேத கேதுவே! சிருஷ்டிக்குப் பூர்வம்) நீ சத்தாக விருந்தாய், அதன்பின் பொய்யாகத் தேஜஸ் முதலிய பூதங்களை உத்பத்திசெய்து, அதன் ரூபமான சரீராதிகளைத் தனது ரூபமாக அபிமானித்துச் சீவனாய் ஆயிற்று. (ஆகலின்) தேகபரியந்தமான காரிய சமூகங்களை (மித்தையாந் தன்மையினால்) திரஸ்காரஞ்செய்து, பரமார்த்த நிஜ ஸ்வரூபத்தினை நோக்கி, சிதாநந்த அத்வயமாக எந்தச் சத்ரூபப் பிரஹ்ம மிருக்கின்றதோ, அது நீயா யிருக்கின்றாய் (என்பது முதல் உபதேசமாம்).

50. ஜநங்கள் (பிரதிதிநம்) சுழுத்தியில், வண்டுகள் நாநா ரசங்களை அநுபவிப்பது போல சத்ரூபத்தில் நன்கு அடைந்து, சத்ரூப சுக பாவத்தினால் ஐக்கியத்தினை அடைந்தும் (தனது சுகத்தன்மையினை) அறியவில்லை. மீண்டும், எந்தச் சத்ரூபப் பிரஹ்மத்தினின்றும் நழுவி அசத் ரூபத்தினை அநுசந்தாநஞ் செய்யுஞ் ஜீவர்கள் அநேக துக்க முடையோ ராகின்றனர். (ஆகலின்) அந்தச் சத்ரூபப் பிரஹ்மம் நீயா யிருக்கின்றாய். ஒரு காலத்தும் (நீ) துக்கியா யிருப்ப தில்லை (என்பது இரண்டாவது உபதேசமாம்).

51. மேகங்களால் வேறு செய்யப்பட்டு நதி முதலியவற்றின் தன்மையினை யடைந்த சமுத்திரம் எங்ஙனம் தனது சமுத்திரத் தன்மைப் புத்தியினைவிட்டு விட்டதோ, அங்ஙனமே சரீரம் முதலிய உபாதிக

ளால் தனது நிஜ சத்ரூபத்தினை நீ ஸ்மரிப்ப தில்லை. (ஆகலின்) அந்தச் சத்ரூபப் பிரஹ்மம் நீயா யிருக்கின்றாய் எனத் தனது பரிபூரண பாவத்தினை (ஹே ஶ்வேத கேதுவே நீ) நன்கு நினைப்பாயாக (என்பது மூன்றாவது உபதேசமாம்).

52. சரீரத்தினின்றும் ஆத்மா அந்நியமா யிருக்கின்றது; ஜீவன் இன்றிய மரம் காய்தற் குறியால் அவ்வாத்மா நித்தியமும்,ஏகமுமாம். பொய்யாக இரண்டாவதாகிய சர்வ ஜகத்தும் இவ்வாத்மாவே (என நீ) அறிதி. (ஆகலின்) அந்தச் சத்ரூபப் பிரஹ்மம் நீயா யிருக்கின்றாய். (அதனால் நீ) பேதப் பிராந்தியினை விடுக (என்பது நான்காவது உபதேசமாம்).

53. உந்நதமாய் ஸ்தூலமாய் உள்ள ஆலவிருக்ஷம் பீஜம் வரை முன்(அத்தியந்த சூக்ஷ்மமான ஆல விதையின் உள்ளிருந்து பின் வெளிப்படுவது) போன்று, (சிருஷ்டிக்குப் பூர்வம்) இந்தச் சகத்து எதனிடத்து இருந்து (மீண்டு) வெளிப்பட்டிருக்கின்றதோ, அந்த, சிரத்தை யுடையோரால் உணரத்தக்கதாய் சூக்ஷ்மத்தினின்றும் மிகச் சூக்ஷ்மமாய் உள்ள, சத்ரூபப் பிரஹ்மம் நீயா யிருக்கின்றாய் (என்பது) சத்தியம். அந்நியம் (யாவும்) அசத்தியமாம் (என்பது ஐந்தாவது உபதேசமாம்).

54. எங்ஙனம் (தரிசந யோக்கியமாயினும்) ஜலத்தில் நெகிழ்ச்சித் தன்மையினை அடைந்து ஒன்றுபட்ட உப்புக் கட்டியை நேத்திரத்தினால் அறிய வில்லையோ, அங்ஙனமே இருதயத்தில் சாக்ஷி ஸ்வப்பிரகாசத் தன்மையினால் விளங்கினும், எது கரணங்களால் அறியப் படவில்லையோ, எங்ஙனம் ஜலத்திலுள்ள உப்பு நாவி

ஞல் அறியப்படுகின்றதோ, அது போன்று குருவின் உபதேசத்திஞல் எது அறியப்படுகின்றதோ, அந்தச் சத்ரூபப் பிரஹ்மம் நீயா யிருக்கின்ருய். இந்தத் திருசியம் நீ யல்லே (என்பது ஆருவது உபதேசமாம்).

55. திருடர்களால் கண் கட்டப்பட்டு, (தனதுதேசத்தினின்றும் தூரத்திற்கொண்டுவந்து ஆபரணங்களை எடுத்துக் கொண்டு) ஜனங்க ளின்றிய வனத்தில் விடப்பட்ட புருஷனைப் போன்று, ராகாதி(களாகிய திருடர்)களால் நித்தியத்தன்மை நிர்மலத்தன்மை யின்றியவனுய்ச் சரீரமாகிய வனங்களில் விடப்பட்டவனு யிருக்கின்ருய். வழிச்சென்ருேன் அவனைக் கண்கட்டினின்றும் விலக்கி யாங்கு, குருவிஞல் பந்தம் விலக்கப்பட்டவனு யிருக்கின்ருய்; (அதஞல்) அந்தச் சத்ரூபப் பிரஹ்மமே நீயா யிருக்கின்ருய். (ஆகலின்) அபரிச்சிந்ந ஆநந்தமாய தனது ஸ்வரூபத்தினே அடைவாய் (என்பது ஏழாவது உபதேசமாம்).

56. மூடன் இந்திரியங்களின் லயக்கிரமத்திஞல் எதனிடத்தில் அடைந்து மரிக்கின்ருன். மீண்டும் ஜந்மத்தினேயும் அதன் நிமித்தமான கர்ம பந்தத்தினேயும் அடைகின்ருன். ஆத்ம ஞாநிகளோ (மூடனைப் போல் எதனிடத்தில் அடைந்து) யமனே வஞ்சிக்கின்றனர்; (எதஞல் முன்னமே) அஞ்ஞாநம் நீங்கி யிருக்கின்றது, அந்தச் சத்ரூபப் பிரஹ்மம் நீயா யிருக்கின்ருய். மிருத்தியுரூப பந்தத்தினைத் தாண்டுக (என்பது எட்டாவது உபதேசமாம்).

57. திருடன், ஒழுகக் காச்சிய கோடரியால் தாகத்தினேயும், (சிறைரூப) பந்தத்தினேயும் அடைகின்றது போல, பொய்ச் சிந்தனேயுடைய, மூட புத்தியினே யுடை

யோனும் (பீடாரூப தாகத்தினையும் மீண்டும், ஜநித்தல் முதலிய பந்தத்தினையும் அடைகின்றான்). உண்மைச் சிந்தனை யுடையோன் தாகத்தினையும், பந்தத்தினையும் அடைவ தில்லை. அதுபோல எந்தச் சத்ரூபப் பிரஹ்ம ஞானி (ஆத்மாவில் ஆத்மாநுசந்தாந முடையவனாதலின் தாகத்தினையும், பந்தத்தினையும் அடைவ தில்லை). அந்தச் சத்ரூபப் பிரஹ்மம் நீயா யிருக்கின்றாய். பந்தப் பிராந்தியினைத் தூரத்தே தூரத்துக (என்பது ஒன்பதாவது உபதேசமாம்).

58. கூறியவாறு நல்லுரையால் பிதாவா லறிவிக்கப்பட்ட புத்திரன் (சுவேத கேது) சத்திய அத்விதீய சுக போத ஸ்பாவமான தனது ஆத்மாவை நேரே உணர்ந்தான். (இவ்வாறு) அந்நியனும் கூறிய சகல உபநிஷத் தாத்பரியத்தினை விசாரித்து, அத்விதீய சித் ஸ்வரூபத்தினை உணர்ந்தவனாய், ஸ்வாராஜ்ய சௌக்கியத்தினை அடைந்து, கிருத கிருத்திய னாகின்றான்.

59. (இவ்வெல்லாம் ஓம் என்னும் அக்ஷரரூபமாம் என உபக்கிரமித்து) சர்வ ஜகத்திற்கும் பிரணவத்தி னிடத்தில் அபேதத்தினைக் கற்பித்துப் (பிரணவ) பாதங்களைப் பகுத்து (ஜகத்து ரூப மூன்று பாதங்களைச் சித் பிரஹ்மரூப லக்ஷியத்தில் அரை மாத்திரைரூப துரீய பதத் தன்மையினால் நிச்சயித்துக் கிரமமாக) லயஞ் செய்து (எந்த லக்ஷிய சித் ரூப பாதம்) மிச்சமாம், அந்த ஒரு ஆத்மா "அயம் ஆத்மா ப்ரஹ்மம்" என ஸ்பஷ்டமாக, அதர்வண வாக்காகிய மாண்டூக்கிய சுருதியாற் கூறப்படுகின்றது.

60. ஏக ரசமாய், தோஷ மற்றதாய்ச், சேதநமாய், ஷட்பாவ விகார மின்றியதாய், எப்பொழுதும் விடுபட்ட

ஸ்வபாவமாய், அபாத்தியமாய், சூக்ஷ்மமாய், அத்வயமாய், நிரவயவமாய், வியாபகமாய், சுகரூபமாய், சர்வ அந்தக்கரண சாக்ஷிரூபமாய், உள்ள, பிரஹ்மம் நானு யிருக்கின்றேன். (ஆகவின்) ஸ்வாபாவிகமான பிரகாசரூப சூரியனிடத்தில் அந்தகாரம் (இல்லாதது) போன்று, அசங்கமாயும், ஆநந்த சத் தேசரூபமாயுமுள்ள என்னிடத்தில் இந்தச் சகத்து இருந்ததுமில்லை இருக்கின்றது மில்லை, இருப்பது மில்லை.

61. கட்டைகளைக் கடைதலினுல் (உண்டாம்) அக்நிஜ் ஜ்வாலை போன்று கூறிய வாறு விசாரிக்கப்பட்ட வாக்கியத்தினுல் அப்பொழுதே உண்டான பிரஹ்மாகார விருத்தியானது, அஞ்ஞானத்தோடுகூடச் சர்வத்வைத சமூகத்தினையும், திரணத்தினைப் போன்று தகித்துக், கைவல்யம் என்னும் பெயரினையுடைய பரமசுகரூப சநாதந ஆத்ம ஸ்வரூபத்தில், சீக்கிரம், ஜலத்தில் வியாபித் திருக்கும் சேற்றை (ஓர் இடத்திற் சேர்த்துவிட்டு அதனிடத்தில் நாசமாம்) தேற்றாங் கொட்டை ரேணுக்கள் போன்று லயத்தினை அடைகின்றது.

62. இந்த அகண்டாகார விருத்தி, அநாதி முத்தாபஜ் ஜ்வரரூப விஷமமாகிய சம்சாரவியாதியை நன்கு நிவர்த்திக்கும் வைத்தியனும். (அங்ஙனமே இந்த அகண்டாகார விருத்தி) இந்திர சம்பத்துமாம். (அங்ஙனமே இவ்வகண்டாகார விருத்தி) அபரிச்சிந்ந பரமாநந்த சமுத்திரத்தினை அடைவிப்பதுமாம். அந்த ஞானாக்நி ஜ்வாலையில் பஸ்பமான கர்ம விதை, மீண்டும் முளையை உண்டாக்குவதற்குச் சமர்த்துடைய தாகாது. (அவ்வாறே) பலத்தோடு கூடிய இவ் விருத்தியின்

அடைவால் சர்வ சந்தேகத்தினுடைய பேதமும், ஆத்மாநாத்ம அத்தியாச ரூப சித் ஜடக் கிரந்தியின் பேதமும், அத்தியந்த நிவர்த்தியும் (சுருதியால்) கூறப்பட்டன.

அபவாதப் பிரகரணமென்னும்
இரண்டாவது பிரகரணம் முற்றிற்று.

மூன்றாவது பிரகரணம்.

---

1. வாக்கிய ஜந்யமாயினும், அகண்டாகார விருத்தி ஞானம், ஸ்வயம்பிரகாச நித்திய அபரோக்ஷ ஆத்ம வஸ்து விஷயமாகிய காரணத்தினால் (தனது) அபரோக்ஷத் தன்மையினை விடுவ தில்லை. (அபரோக்ஷ விஷய ஞானம் பரோக்ஷம் என்பது பொருந்தாது). "நீ பத்தாமவன்" என்று கூறிய வாக்கியத்தினைத் திடமாகக் கேட்டுத் தனது பத்தாமவன் தன்மையினை அறிவதற்கு யத்நஞ் செய்யாதிருக்குந் தன்மை போலுமாம்.

2. ஸ்வபாவத்தினாலே அபரோக்ஷ வஸ்துவாய் ஆத்மா, சப்த ஜந்நிய ஞான விஷயத்தன்மை அபாரதத்தான் பரோக்ஷத் தன்மையினைப் பொருந்துவ தில்லை. (எதனால்) தீப, சூரியப் பிரகாசங்கட்குக் கடாதிவிஷயத்தில் விளக்கத்தினால் பேத மிருப்ப தில்லை (அது போலுமாம்).

3. அபரோக்ஷ விஷயமான பரோக்ஷ புத்தி பிரமாணத் தன்மையினை அடைதற்கு யோக்கிய மில்லை. குசலனாயினும் ஸ்வயமாகச் சதா விளங்கும் தனது ஆத்

மாவை, ஆத்மாவைக் குறித்து மறைத்துக் கொள்ளுவ தற்குச் சமர்த் தின்றியவனுகின்முன்.

4. இந்திரியங்களால் அபரோக்ஷத் தன்மை நிய மநஞ் செய்யப்படுவ தில்லை; சுக துக்க இச்சை யத் நங்களில் (வேதாந்திகளின்) சம்மத மின்மையின்;(அங் ஙனமே) இருள் சுழுத்தி (ஸ்வப்ந) பதார்த்தங்களில் (இந்திரியத்தினுல் உணருந் தன்மை) பார்க்கப்படாமை யின், அபரோக்ஷ ஞாநத்திற்கு,விஷயத்தினது யோக்கி யத் தன்மையும் காரணமாம்.

5. பரோக்ஷ ஞாநம், மறைப்புடைய பொருள் விஷயமாகுக மஹா வாக்கியத்தினுலே பிரஹ்ம அஞ் ஞாநம் நிவிருத்தியாயிற்று (என்று தத்துவஞ்ஞர்க ளால்) அநுபவிக்கப்படுகின்றது. (அங்ஙனமே சாந் தோக்கிய) சுருதியும் (எது பூமா அது சுகம் என்று) உபதேசம் மாத்திரம் புகன்று (நாரதர் பொருட்டு அஞ்ஞாநத்தின்)கரையினை அறிவிக்கின்முர், (பகவான் சநத் குமாரர், என்பதனையும் தானே) கூறுகின்றது.

6. எதனுல் ("அரே ஆத்மா பார்க்கத்தக்கது" என்னும் பிருஹ்தாரண்ய சுருதி) பரமாத்ம சாக்ஷாத் காரத்தின் பொருட்டு விசாரிக்கப்பட்ட வேதாந்தத் தினை விஷயமாகவுடைய சிரவணம் விதிக்கின்றது. எதனுல் உபதேச மாத்திரத்தினுல் அஞ்ஞாநம் நாச மான சிஷ்யர்கள் (நீ) பிதாவா யிருக்கின்முய் கரையை எங்களை அடைவிப்பாய் என்று (பிப்பலாத குருவைக் குறித்துக்) கூறினுர்கள். (இக் கதை பிரஶ்ந உபநிஷத் தில் இருக்கின்றது).

7. ஸ்வபாவமாகவே ஸ்வப்பிரகாச சைதந்நியத் திற்கு அபரோக்ஷத்தன்மை எனையவற்றின் அபேக்ஷை

யின்றிய முக்கியமாம். ஆவரண மின்றிய சாக்ஷி சேதநத்தில் தாதாத்மியத்தினுல் அத்தியஸ்தமான தனது இந்திரிய சேதந விஷய ஞாதுரு ஞாந ஞேயங்களில் உள்ள அபரோக்ஷத் தன்மை கௌணமாம். பாஹ்ய விஷயத்தில் சைதந்யத்தின் சம்பந்த முண்டாக்குவதற்கு இந்திரியத்தினின்றும் உண்டான விருத்தி உசிதமாம். மஹா வாக்கியத்தினின்றும் உண்டான அகண்டாகார விருத்தியோ, சித் சம்பந்தமான அஞ்ஞாநத்தினை மாத்திரம் நாசஞ் செய்கின்றது: விளக்கமோ ஏனையவற்றை அபேக்ஷிப்ப தில்லை.

8. கடாதி விஷய அஞ்ஞாந நாசத்தின் பொருட்டு, அல்லது சைதந்நியத்திற்குக் கடாதி சம்பந்தத்தினை உண்டாக்குதற்கு, அந்தக்கரணம் கடாதி விஷயாகாரத்தினை அடைதற்காகச், சரீரத்தின் வெளியில் விஷய இந்திரியங்களின் சம்பந்த ரூப மார்க்கம் விரும்பப் படுகின்றது.

9. எது சக்ஷுா முதலியவற்றுல் அறிதற் கசக்கியமோ, சக்ஷுா முதலியன எந்தப் பரமாத்மாவினுல் ஒவ்வொரு விஷயத்தில் நன்கு பிரகாசிக்கப்பட்ட பதார்த்த முடையன வாகின்றனவோ, எது வாக்காதிகளால் கோசரிக்கப்படுவ தில்லையோ, எதனுல் வாக்காதிகள் பிரவர்த்திக்கின்றனவோ, எதனுல் பிராணன் (வியாபாரத்தில்) பிரவிர்த்திக்கின்றதோ, எந்தச் சைதந்நியத்தினுல் சரீரம் இந்திரியம் மநம் புத்தி முதலியன பிரகாசிக்கின்றனவோ, அது, சுத்தமாய், ஸ்வப்பிரகாசமாய், அத்வயமாய், அபயமாய், சச்சிதாநந்த ஸ்வரூபமாயுள்ள ஆத்மாவாம்.

10. கூறியவாற்றுல் நன்கு போதிக்கப்பட்டும், (சம்சயம் முதலியவற்றுல்) ஆத்ம தத்துவத்தில் நிச்சய மில்லாத புத்தியினுல், எவனுக்கு ஆத்ம ஞானம் சித்திக்க வில்லையோ, அவன் வித்துவான்களின் சகாயத்தினுலாவது, அல்லது, தானுகவாவது, மீண்டு மீண்டும் விசாரத்தினை அப்பியாசஞ் செய்க. (ராகாதிகளோடு கூடினவனே) சஞ்சல நிவர்த்தியின் பொருட்டு இந்திரியங்களையும், மநத்தினையும், இச்சித்தவற்றைச் சம்பாதித்தலினுலாவது, அல்லது அடத்தினுலாவது, அவ்வவற்றின் விஷயத்திற் செல்ல வொட்டாது நிவர்த்தித்து, சுத்தமான இடத்தில், ஏகமாயும், அநந்தமாயும், பரம சுக சித் ரூபமாயும் உள்ள ஆத்மாவைத் தியாநிக்குக.

11. (தியாந விரோதியான) சங்கத்தினை விட்டு, பொறுமை யுடையோனுய், பவித்திர உபகாரஞ் செய்யுஞ் சாஸ்திரத்திற் கூறிய பிரமாணத்தோடு கூடிய வஸ்துவினைப் புஜிப்போனுய், யோக சாஸ்திரார்த்த விசார ஸ்வபாவ முடையோனுய், தோஷம் இன்றிய புண்ணிய தேசத்தில்,யம நியமங்களால் திடனுய்,ஸ்வா சநத்தி விருப்போனுய், பிரசன்னனுய் (இருந்து கொண்டு சாஸ்திரத்திற் கூறிய) பிராணுயாமக் கிரமத்தினுல் (விஷயங்களி னின்றும்) இழுத்துச் சுபாவமாகச் சலந முடைய மநதை (முதலில்) தூல (யான மூர்த்தி) முதலியவற்றிலும், (பின்) சூக்ஷ்ம(மான ஆத்மா விட)த்திலும் கட்டி, (அதனையே) தியாநஞ் செய்து, ஏகாத்ம சுகத்தில் ஸ்திரமான ஏகத் தன்மை மந முடையோனுய், அஞ்ஞாந பந்தத்தினை நாசஞ் செய்கின்றுன்.

12. மஹா வாக்கியத்தினுலாவது, யோகத்தினு லாவது, எல்லையற்ற மிகுந்த ஆநந்த ஞாந ரூப பரமாத்மாவின் சாக்ஷாத்காரம் உண்டாமிடத்து, சதா திட சமாதி யுடையோ னுருக. அல்லது, லோகத்தி லுள்ள வரைச் சிக்ஷிக்க வேண்டு மென்னும் அபிப்பிராய முடையவனுய் விஷயங்களைப் பூஜிக்குக; (எவ்வாற்ருனும்) மீண்டும் பந்தத்தினை அடையான்.

13. பூமியின் பரமாணுவினும் அதிக எண்ணிக்கையினை யுடைய ஹிரண்ய கர்ப்பர்கள், நாச மடையினும் அடைய முடியாதாகலின், துக்க மின்றிய ஆநந்த சமுத்திர ரூப தனது ஆத்ம லாபத்தி னின்றும் உத்தமமான வேறு லாப மில்லை.

14. அஞ்ஞாநத்தினுல் அடையப்படாததா யிருந்த தன தாத்மாவினது முன்னர்க் கூறிய லாபம், கண்ட சாமீகர நியாயத்தினுல் ஞாந மாத்திரமாம். எக்காரணத்தினுல் சுருதி (ஆத்மா வென்று உபாசிக்குக என) ஞாநத்தினையே முதலிற் கொண்டு, மீண்டு மீண்டு (இதனுல் இவ்வெல்லா வற்றினையும் அறிக; எங்ஙனம் பசுவின்) பதத்தினுல் அறிக என்று கூறுகின்றது.

15. பாதிக்கப்பட்டது அசத்தாம்; த்வஸ்த வைதர்மியத்தினுல் (நாசமான காரியம் சம்ஸ்கார ரூபத்தினுற் காரணத்திற் சுத்தாகின்றது. திரோ பூத பாதிதமோ அங்ஙன மன்று; ஆகலின் விஷமத்தன்மை யிருத்தலின் என்க). அஞ்ஞாநத்தின் பாதமும் த்வம்ச ரூப அபாவமே. வேறு (அதிஷ்டாநத்தி னின்றும் அந்நியம்) அன்று. அத்தியந்தாபாவம் மாத்திர ரூபமும் பாத புத்தி யன்று, (எதனுல் இது சர்ப்ப மன்று இது

ரஜ்ஜு என்பது அதிஷ்டாநத்தினையும் கிரகிக்கின்றது) அல்லது, அபாவமும் அதிஷ்டாந ரூபமாம்; (வேறு பதார்த்த மன்று.)

16. ஞாநாக்நியினால், ஆரம்பிக்கப்பட்ட தேகம், அதற்கு அந்நியமான சஞ்சித கர்மம் யாவும், சீக்கிரம் பஸ்மத்தன்மை யடைகின்றன; (அங்ஙனமே) ஞாநத்தின் பின் பிராரப்த வேகத்தினா லுண்டாம் கர்மத்தினால், ஞாநத்தினால் நிர்மலத் தன்மை யடைந்த தத்துவ வேத்தா, ஜலத்தினால் தாமரை இலை போன்று பற்றப் படான்.

17. ஸ்வயம் பாதிக்கப்பட்ட ஜகத்தும், ஞாநிகட்கு, தேகம் நீங்கும் வரை (ஸ்வப்ந சம்பந்தி) திருடன் பாதமாயினும் அதனால் உண்டான பயம் முதலியன போன்றும், வஸ்திரம் தகிக்கப்படினும் (சில காலம் பிரதீதியாம்) வஸ்திராகார பஸ்மம் போன்றும், (தேகாதிகளில்) பிராரப்த போகத்திற்குச் சமர்த்தமாகின்றது.

18. ஞாநிக்கு ஜீவிக்கும் போதும் சரீரத்தில், புற்றில் விடப்பட்ட சட்டையை மீண்டு பார்க்கினும் பாம்பிற்கு (தான் என்னும் புத்தி யில்லாதது)போன்று, ஆத்ம புத்தி யில்லை. (உபகார புத்தி பலத்தினால் உத்சாகப் பிரவிருத்திப் பார்க்கப்படுதலினால்) அந்நியர்கள் தமது அஞ்ஞாநத்தினால் இந்த வித்துவானுக்கு ஜீவத் தன்மையினைக் கற்பிப்பார்களாயின், (பிறராற்) கற்பிக்கப்பட்டது இருக்குக. அதனால், இந்த வித்துவானுக்கு ஸ்வ ரூபத்தில் ஹாநி என்? (ஒன்றும் இல்லை யென்பது கருத்தாம்).

19. தத்துவ ஞானிக்கு, அகிதம் செய்தற் பொருட்டு எல்லாத் தேவாசுரர்களும் முயற்சி யுடையோராயினும் சமர்த் தின்றியவ ராகின்றனர். எதனால் தனதநிஷ்டத்தினை எவன் செய்வான்? (ஒருவனும் செய்யான்). இந்தப் பலத்தோடு கூடிய ஆத்ம ஞான யத்நவானே, தேவாசுரர்கட்கும், ஜகத்திற்கும் ஆத்மஸ்வரூபமா யிருக்கின்றான்.

20. ராகம், லோபம், பிரமாதம் முதலிய தோஷம் நாச மாயினமையின், ஒரு காலத்தும் நிஷித்தக் கிரியையில் இவ் வித்துவான் பிரவிர்த்திக்க மாட்டான். சத்ஜநர்களுடைய ஸ்வதர்ம அநுஷ்டாந ரூப சரீத்திரத்தினைப் பாவிக்கும் யத்ந முடையோனாய்ச், சாது போன்று சர்வப் பிராணிகளுக்கும் உபகார மார்க்கத்தினால், அநேக ஜந்மங்களின் சுத்த சம்ஸ்காரத்தின் பலத்தினால் பிரவர்த்திக்கின்றான்.

21. ஞானி, அதிசயமான அநேக பிரியத்தினை அடைந்து சந்தோஷிப்பது மில்லை. மிகுந்த துக்கங்களிலும் மஹா மேரு போன்று நிச்சலனே யாவன். ஆத்மாவை (ச் சதா)ப் பாவித்து ஆத்மாவானே ஆநந்த முடையோனாய்த் தேவர் போன்று பிருதிவியிற் சஞ்சரிக்கின்றான்.

22. (வசிஷ்டர் முதலிய) சிலர் வர்ணாசிரம ஆசாரத்தின்கண்ணே தத்பர ராயினர்; (ஜடபாரதர் முதலிய) சிலர் அஞ்ஞ பால பிரமத்தர்கட்குச் சமமான ஆசார முடையோ ராயினர்; (சௌபரி முதலிய) சிலர் ராகிகளாய்ப் போக தத்பர ராயினர்; (ஜைகீஷவ்யர் முதலிய) சிலர் சமாதியி விருப்போ ராயினர். (ஆக

வின்) ஞாநிகளின் ஆசாரம் ஒரு ரூபமாகப் பார்க்கப் படவில்லை.

23. சகஜமான தமதாநந்தத்தில் சதா சஞ்சரிப்பவர்களாயும், தம திச்சையினால் லீலை செய்பவர்களாயும் உள்ள ஞாநிகளின், அறியக்கூடாத மார்க்கத்தில், ஜலத்தில் மீன்கட்கும், ஆகாயத்திற் பக்ஷிகட்கும் திக்கின் முகத்தில் வாயுக்கட்கும் (கதி)போன்று, சங்கமின்றியும், பிரதிபந்த மின்றியும், ஜநங்கட்குக் கல்யாணத்தினைச் செய்வதாயுஞ் செல்லுதல் அநேக விதமாய்க், கூடமாய், விசித்திரமா யிருக்கின்றது.

24. யோகிகளால் தியாநிக்கத் தக்க பாத தாமரை எவனுக் கிருக்கின்றதோ, அவன் மூன்று லோகத்திற்கும் நாதனாகிய ஹரியாவன். இந்தச் சம்சாரத்தில் அவனைப் பார்க்கிலும் தந்நியன் ஒருவனு மில்லை. ஏவன் "ஸ்வயம் சாந்தரூப ஞாநியைப் பின்பற்றிச் சதா நான் அடைவேன், அவரது பாதரேணுக்களால் பவித்திர மடைவேன்" என்று கூறப்படுகின்றனனோ அவன், ஜகத் குருவாகலின், தேவாசுர மனிதர்களால் நமஸ்காரஞ் செய்யப்படும் பாத தாமரையுடைமையினன், ஆத்மாநந்தத்திற் பிரவேசித்த நிச்சல புத்தி யுடைமையினன் (என்க).

25. அவ் இவ் வித்துவான், பூர்ண மநோரதனாயினும், ஸ்வாபாவிகமான குதூகலத்தினால் பிருதிவி எங்குஞ் சென்று, எல்லோரது இதத்தில் தத்பரனாய், ஒவ்வொரு பதத்திலும் ஸ்வரூபாநந்தத்தினை அநுபவிப்பவனாய், மோக சமுத்திரத்தின் கரையினை அடைந்து, " அறிய முடியாதது என்னால் அறியப்பட்டது."

என்னும் ஆச்சரியத்தோடும் "எவ்வாற்றானும் என்னால் அநுபவிக்கப்படுகின்றது" என்னும் குதூகலத்தோடும், "ஏனையரும் என் போன்று எவ்வாறுவார்கள்" என்னும் கிருபையோடும், "கிருதார்த்தனாயிருக்கின்றேன்" என்னும் ஆநந்தத்தோடும் கூடி, மீண்டும் மீண்டும் தன தாநந்த லாபத்தினை வெளிப்படுத்தும் மிகுந்த இச்சையினால் கூறுகின்றான்.

26. சகஜ சங்கடமாகிய ஜந்ம சமுத்திரத்தில் கீழ்ப்போன அநேக காலமாக மூழ்கி யிருக்கும் என்னால், புண்ணியப் பிரபாவத்தினால் குரு ரூப அமிர்த சிந்தாமணி அடையப்பட்டது. எந்தக் குருமணியின் ஸ்வச்சப் பிரியமாகிய வாக்குரூபப் பிரபைகளால் திமிரம் நீங்குமிடமாகிய ஆத்மாவால் வியாபிக்கப்பட்ட பரமாநந்த ஜ்யோதி ரூப வீட்டில் எக்காரணத்தினால் நான் ரமிக்கின்றேன். (இஃது) ஆச்சரியமாம்.

27. (ஞாநத்திற்கு) முன் மாயையினால் மறைக்கப்பட்ட திருஷ்டி யுடையவனாய், சகஜமாகச் சுயமாக விளங்கும் தனதாநந்தத்தினை அறிந்தும் (இதுதான் சிதாத்மா வென) எங்ஙனம் அறிய வில்லை, அங்ஙனமே ஞாநத்தின் பின் ஞாந ரூப மையினால் நிர்மல திருஷ்டி யுடையவனாய், பொய்யான இந்தச் செகத்தைச் சிதாகாசத்தில் அறிந்தும் (சத்தியத் தன்மையினால்) அறிவதில்லை.

28. ஸ்வபாவமாகப் பரமப் பிரியமாய், சுக மூர்த்தியாய், வேத்திய மின்றியதாய், அவேத்திய மின்றியதாய், வாக்கினாற் கூறக் கூடாததாய், நிஷேதிக்க முடியாததாய், எவ்வாற்றானும் நிரோதம் செய்ய முடி

யாததாய், க்ஷண மாத்திரமும் மறைக்க முடியாத தாய், தள்ள முடியாததாய்க் கொள்ள முடியாததாய் உள்ள நமது ஆத்மா (அகண்டாகார விருத்தியினுல்) சாக்ஷாத்காரமாய் அநாயாசமாய்ச் சீக்கிரம் இந்த ஜகத் தினைத் திரோதாநஞ் செய்கின்றது.

29. பிரகாசசித் ரூபமாய், ஸ்வாதீநமாய், சமாந மின்றிய ஆத்மாநந்த சமுத்திரமாய என்னிடத்தில் முநம் லயமடையுமாயின், இவ் வெல்லாச் செகத்தையும் அறியமாட்டேன். (சூரியாதி போன்று) அஸ்தமிக் கின்றதா ? (கடாதி போன்று) த்வம்சமா? (அல்லது) மர்த்தநமா? (அக்நி சம்யோகத்தினுல் நெய் போன்று) லயமா ? (அநேக காலம் விரிந்திருந்து பிருதிவியின் மூல வாயுவினுல் பீடிக்கப்பட்ட சதபத்திரம் போன்று) விசீரணமா ? (சர்ப்பத்தின் முகத்தில் தவளையின் சரீரம் போன்று) ஆகீரணமா ? (அல்லது சீக்கிரம் அள வாகப் புஜித்த அந்நம் போன்று) ஜீரணமா ? (எல்லா விடத்திலும் ஒருவாற்ருல் வேறு சத்தை காணப்படு கின்றது. ஜகத்திற்கோ சத்தை யில்லை யென்பது தாத் பரியமாம்). (சதபத்திரம்-தாமரை; விசீரணம்–சுருங் குதல்).

30. சுத்த சேதநமாய், சங்க மின்றியதாய், செய்யப்படாத ஸ்வரூபமாய் உள்ள பிரத்தியக் பிரஹ் மத்தின்கண், இந்தச் செகத்து, எங்ஙனம் உண்டா யிற்று, எங்ஙனம் இருக்கின்றது, பின் எவ்வாறு லய மடைகின்றது என்று நன்கு விசாரித்து, ஜெகத்துப் பொய் என்று நிச்சயஞ் செய்து சுகியா யிருக்கின் றேன்.

31. ஆதார ரூப தேக மின்றியதாய், அவயவ சிருஷ்டி யின்றியதாய், அசலமாய், இச்சை யின்றியதாய், அத்

வயமாய், சமாந ரகிதமான ஆநந்த ரூப ஐஸ்வரிய முடையதாய், மாயா சம்பந்த மின்றியதாய் உள்ள அந்தப் பரப் பிரஹ்மம், பாஹ்ய சாதநமும், அந்தரங்கமான சக்ஷு முதலிய கரண சமுதாயமும் இன்றி மூன்று லோகமாகிய வீட்டினை எங்ஙனம் சிருஷ்டிக்கின்றது? (ஒருவாற்றானும் பொருந்தாது என்பதாம்).

32. தேகாதிகள், அல்லது, வேலைக்காரர்கள் இல்லை, புத்தி முதலியன, அல்லது, மந்திரிகள் இல்லை, நிர்சயமாக்ச் சப்தம் முதலியன, அல்லது, பிரதேசமாகிய விஷயங்கள் இல்லை, இந்திரியங்கள், அல்லது, குதிரைகள் இல்லை, சத்தியமான, அல்லது, பூரணமான அந்நமயாதி கோசங்கள், அல்லது, தநம் கிருகம் முதலியன இல்லை சரீரத்திரய அத்தியாசங்கள், அல்லது, கிராம நிவேசங்கள் இல்லை, நல்ல வியாபாரங்கள், அல்லது, சிநேகிதர்கள் இல்லை; அங்ஙனமாயினும், சகாயமின்றிய, அல்லது, அத்வயமாய ஆத்மா, ஸ்வரூப பலத்தினால், அல்லது, புஜ பலத்தினால், துச்சஞ் செய்யப்பட்ட, அல்லது, திரஸ்காரஞ் செய்யப்பட்ட, காமாதி சேனைகளை, அல்லது சத்துரு சேனைகளைச் செயித்து, இந்தச் சகல ஜகத்தினையும் ரக்ஷிக்கின்றது. இஃதாச் சரியமாம்.

33. அசங்கமாய், உதாசீநமாய், சகஜமாக மிகுந்த ஆநந்தத்திற் திருப்தமாய், போசந இச்சை யின்றியதாய், சித் சரீரமாய், கால் கை வயிறு இன்றியதாய், மாயை யின்றியதாய், ஸ்வரூபமாகச் சித்தி (துவா)ர மின்றியதாய் இருப்பினும் இவ் வாத்மா, மாயையோடு கூடிய மூன்று லோகத்தினை எக் காரணத்தினால் எவ்வாறு விழுங்குகிறது? இஃ தாச்சரியமாம்.

34. மூடர்களால் அடிக்கடி சத்தியத் தன்மையி ஞல் ஆரோபிக்கப்பட்ட பதார்த்த சமூகமாகிய ஜகத் தினை அந்தியந்தந் தள்ளுகின்றேன். விசுவசிக்கத் தக்கது ஒன்றும் எனக் கில்லை; யமனது தண்டத்தினு லும் எனக்குப் பய மில்லை. குணத்தைத் துவேஷிக் கின்றேன்; (நிர்க்குண மாகலின்). ஆத்மார்த்தத்தில் பிரியம் வைக்கின்றேன். கூறிய ஜகத்தின் சர்வ சொத் துக்களையும் கைக்கொள்ளும் பரமான எனது சித்திர சரித்திரத்தினை ஒரு காலும் ஒருவரும் அறிதல் முடியாது.

35. எனக்குப் பிதா இல்லை, மாதா இல்லை, இதத்தினைச் செய்யும் பந்து வில்லை, மந சரீர கிருகங் கள் இல்லை, (நீணாள் ஜீவிக்கக் காரணமான) தந மில்லை, அந்நம் இல்லை, ஜல மில்லை, சதா பாவிப்பவர்க ளில்லை, வஸ்திர மில்லை, எங்கும் சஞ்சரிக்கும் என்னை மூட ஜநங்களும் விரும்புவ தில்லை. ஹா ஹா! எனக்கு இவ்வாருகத் துர்க்கதி யிருப்பினும் சமாந மின்றிய சுகாதிக்கிய மிருக்கின்றது. இஃது ஆச்சரியமாம்.

36. எது ஜகத்து ரூபமோ, அது வாஸ்தவமாகச் செகத்து ரூப மன்றும். எது எல்லாவற்றிற்கும் வெளி யும் உள்ளுமோ, அது வாஸ்தவமாக உள்ளும் வெளியு மன்றும். எது சமுசார சமுத்திரத்திற்குக் கரையோ, அது வாஸ்தவமாகக் கரை அன்றும். அஹங்கார மின் மையினுல் அஹம் பத அவாச்சியமாய் நான் இருக்கின் றேன் என்று பாவித்துத் தன்னுனே ஆச்சரிய முடை யோ னுகின்றுன்.

37. எனக்கு எந்த லோகமும் சத்தியமாகவில்லை. மீண்டும் கமல ரூப இருதயமும், கிருகமும் இல்லை,

ராகாதி மலிநமும் இல்லை, என்னிடத்தில் விதி சப்தம் சமர்த்துடையதாவ தில்லை, தத்வமசியாதி வாக்கியங்களோடு சம்பந்தமு மில்லை, சங்கட சமுசாரத்தில் துக்கித் தன்மையுமில்லை; அங்ஙனமாயினும், "நான் பிரஹ்மா" (எதனால் இவன் பிரஹ்மா இவன் இந்திரன் என்பதாதி) வேத சமூகம் அந்தப் பிரஹ்மத் தன்மையினைக் கூறுகின்றன.

38. (சுத்த சித்ரூப) நான் மாயை யன்று, பாம்புரூப அந்தக்கரணத்தில் இருப்ப தில்லை, சம்சார ரூப சக்கரம் தரிப்பவனு மல்லன், சாக்கிரம் முதலிய பத்தவஸ்தைகளில் அவதரிக்கும் ஸ்வபாவ முடையோனல்லன், எனக்குச் சம்சாரத்தினை ஸ்தாபிக்குந் தன்மை யில்லை; அங்ஙனமாயினும், பிரசித்த சர்வ ஜகதீஸ்வரனாகிய நான் விஷ்ணுவா யிருக்கின்றேன்.

39. (எனக்கு) அண்டஜ, ஸ்வேதஜ, உத்பிஜ்ஜ, ஜராயுஜ, ஆப்ய, தைஜஜ, வாயவீய, மாநச ரூப எட்டுச் சரீரங்கள் இல்லை, பேத திருஷ்டியும் இல்லை, ஜந்ம சம்பந்தம் இல்லை, தர்மத்தினால் அந்த அந்த லோகத்திற் செல்ல லில்லை, ஜீவர்களாலும் சங்கமில்லை, இச்சையினை அழிப்பவனும் இல்லை; அங்ஙனமாயினும், சாக்ஷாத் பரமசிவன் நானா யிருக்கின்றேன்.

40. ஜாக்கிர ஸ்வப்ந சுழுத்தியாகிய வநத்தில் சஞ்சரித்தும் அசங்கமாயும், பாரமார்த்திக சத்தையின் சாமர்த்தியத்தினால், வெளிமுகமாக ஓடும் இந்திரியங்களாகிய புலிகளினால் பார்க்க முடியாததாயும், சிரவணமாகிய லீலையினால் உண்டான அகண்டாகார விருத்தியினால் நாசஞ் செய்யப்பட்ட மூலாஞ்ஞாநரூப மதங் கொண்ட யானைக் கூட்டங்களை உடைத்தாயும் இருக்

கும் நமது நிஜப் பிரத்தியக் காத்மரூப சிஹ்மமானது முக்காலத்திலும் பாதிக்கக் கூடாத பதத்தில் விளங்குகின்றது.

41. ஞானிகள், லோக அஞ்ஞானத்தினை நாசஞ் செய்வதாயும், சத்திய அர்த்தத்தினை யுடையதாயும், சிரவண சுகத்தினைக் கொடுப்பதாயும், அமிருதம் போன்று அறிவிக்கின்றதாயும், முற்கூறியுள்ள வாக்கியங்களால், புண்ணியவான்களாய் நமஸ்கரித்த சிஷ்யர்களை, ஒவ்வொரு பதத்திலும் ஆநந்தஞ் செய்து கொண்டு பத்துத் திக்குகளையும், சூரியன் போன்று பவித்திரஞ் செய்கின்றனர்.

42. கர்ம சமூகங்களை விட்டு, சுருதி சார சுகரூபமாய், அபயமாயுள்ள ஆத்மாவில் சித்தத்தை ஸ்தாபித்து எவன் ஆநந்த முடையோனாகின்றனனோ, அவனே தந்நியன், உத்தம கிருதார்த்தன், எல்லோராலும் பூஜிக்கத் தகுதியுடையோன். இவனது குலம் தந்நியங்கள் யாவினும் தந்நியமாம்.

43. கிருபாப் பிரவாகத்தில் விழுந்தவர்களைக் கரையேற்றுபவராய், மநோரதம் யாவும் சித்தித்தவராய், கூறியவாறு அநேக காலம் சஞ்சரித்து, எல்லாப் பிராரப்தங்களும் நசிக்குமிடத்தில், சர்வ துக்க நிவர்த்தராய், தேக மின்றியவராய், ஸ்வப்பிரகாச ஆநந்த சமுத்திரமாக இருக்கின்றார்.

44. உத்பத்தியாவது மில்லை, லய மடைவது மில்லை, விருத்தி யடைவது மில்லை, நாச மடைவது மில்லை, தனது விளக்கத்தானே பிரகாசிக்கின்றான். ஸ்வாபாவிக ஆநந்தாமிருதத்தினால் சதா பூரணன்,

துவைத சம்பந்த மற்றவன், கூற முடியாதவன், தனது ஆத்மரூப சந்திரன் ஆக விளங்குகின்றான்.

45. சகல ஆநந்த ரூப பநிக்கட்டிக் கூட்டங்கட்குச் சமுத்திரமாயும், சகல ஞாந ரூப அக்நிப் பொறிக் கூட்டங்கட்கு மூலாக்நியாயும், பஞ்சகோசத் துவாரத்திலும் ஹிருதயத்திலும் மறைந்திருக்கும் கூடமாயும், துவைதப் பிராந்தியினை நிவர்த்திக்கும் கட்க லதையாயும், அஞ்ஞாந அவிவேக ரூப அந்தகாரத்திற்குச் சூரியனாயும், எங்கும் விளங்கிக்கொண்டு உபநிஷத் முடியில் விளங்கு மணியாகிய சித் ரூபப் பிரத்தியக் காத்மா எங்கும் விளங்குகின்றது.

46. சாந்தி, தாந்தி முதலிய திவ்விய மணிகளால் அலங்கரிக்கப்பட்டுச் சோபிப்பவர்களாய், வேதாந்த சமுத்திர அமிருத ரச ரூப ஆத்மாவில் அத்தியந்தம் விருப்புடையவர்களாய், (சிரவணத்தின் பொருட்டு) மோக்ஷ ரூப கற்ப விருக்ஷ மூலமாகிய பிரஹ்ம ஞாநியாகிய குருவின் திருவடியினை அடைந்தவர்களாய் உள்ள பண்டிதர்கட்குச் சந்தோஷத்தின் பொருட்டு இந்தச் சுவா ராஜ்ய சித்தி யிருக்குக.

47. புத்தியினைப் பிரேரிப்பிக்கும் உமா மஹேஸ்வரர்களின் பிரீதி உண்டாதற்கு (அவர்கள்) பாதங்களாகிய தாமரைகளிடத்தில் வாக்கிய ரூப புஷ்பங்களின் நமஸ்கார ரூப ஸ்வா ராஜ்ய சித்தி பக்தியினால் அர்ப்பணஞ்செய்யப்பட்டது.

மூன்றாவது பிரகரணம் முற்றிற்று.

ஸ்வா ராஜ்ய சித்தி முற்றுப் பெற்றது.

லோகோபகாரி ஆபீஸ்-சென்னை.

சம்ஸ்கிருத மொழிபெயர்ப்புப் புத்தகங்கள்.

இதுகாறும் தமிழில் வராதன.

வியாச தாத்பர்ய நிர்ணயம்.

சம்ஸ்கிருதத்தில் அய்யண்ண தீக்ஷிதரென்னும் பெரிய வித்வானால் வசநவடிமாக இயற்றப்பட்டுள்ளது. அதன் முதற் பரிச்சேதத்தில் சகல வாதிகளையும் பக்ஷபாத மின்றி வாதிப் பிரதிவாதி மத்யஸ்த பூர்வகம் கண்டித்து வியாஸ பகவானது தாத்பர்யம் அத்வைதமே என ஸ்தாபிக்கப்பட் டிருக்கின்றது; இரண்டாம் பரிச்சேதத்தில் பிரஹ்மப் பிராப்தி அமூர்த்த ரூப சகுணப் பிரஹ்மத்தாலேயே ஆகும் என மற்றையோர்களைக் கண்டித்து நன்கு ஸ்தாபிக்கப்பட் டிருக்கின்றது. இது கோவிலூர் ஸ்ரீ காசிகாநந்த சுவாமிகளால் தமிழில் வசந வடிவமாக மொழிபெயர்க்கப்பட் டிருக்கின்றது. வேதாந்திக ளெல்லோரும் பிறமதஸ்தரைக் கண்டித்தற்கு இப்புத்தகம் மறந்துங் கைவிடாது வைத்தற் குரியதாம். **விலை அணா எட்டு.**

நைஷ்கர்ம்ய சித்தி.

இது சர்வ தர்சனங்களுக்கும் வியாக்யானஞ் செய்த சுரேஸ்வராச்சாரியா ரவர்களால் இயற்றப்பட்டது. இந்நூலில் மோட்சத்திற்குக் கர்மம் சாதகம் அல்ல வென்று நான்கு அத்தியாயங்களால் கத்திய பத்திய வடிவமாக நன்கு நிரூபிக்கப் பட்டிருக்கின்றது. இக்கிரந்தந்தான் சம்ஸ்கிருதத்திலுள்ள பஞ்ச சித்திகளுள் (நைஷ்கர்ம்ய சித்தி, இஷ்டசித்தி, அத்வைதப் பிரஹ்ம சித்தி, அத்வைத சித்தி, சுவாராஜ்ய சித்தி) முதன் முதல் செய்ததாம். இது சம்ஸ்கிருதத்தில் மிகு பிரசித்தமும் கம்பீரமுமா யிருப்பதை நோக்கித் தமிழ் மக்கட் குபயோகமாமாறு ஸ்ரீ கோவிலூர் - காசிகாநந்த சுவாமிகளால் வசந வடிவமாக மொழிபெயர்க்கப்பட் டிருக்கின்றது. இதுகாறும் தமிழில் வெளிவந்திருக்கும் விசாரசாகர முதலிய லட்சண கிரந்தங்கட் கெல்லாம் இதுவே மூலமாம். **விலை அணா எட்டு.**

(சுக்ல யஜுர்வேதத்திலுள்ள)

மண்டலப் பிராஹ்மஞோப நிஷத்தும் ராஜயோக பாஷ்யமும் - விலை அணா நான்கு.

இதன் கண் ஐந்து பிராஹ்மணங்க ளிருக்கின்றன; ராஜயோக சம்பந்தமான விஷயங்கள் மிகத் தெளிவாகக் கூறியிருக்கின்றமை நோக்கி ஸ்ரீ சதாநந்த அவதூதரால் இதற்கு அதிலலிதமான பாஷ்யம் ஒன்றியற்றப்பட் டிருக்கின்றது. இதன் கண் ராஜயோக தத்துவங்களோடு வேதாந்த தத்துவங்களும் அதி வெளிப்படையாக விளக்கப்பட் டிருக்கின்றன. இதனருமையை நோக்கித் தமிழ்மக்கள் யோக தத்துவத்தை அநாயாசமாக உணருமாறு மண்டலப் பிராஹ்மஞோப நிஷதமும், அதன் வியாக்கியானமாய ராஜயோக பாஷ்யமும் செவ்விய வசநவடிவமாக ஸ்ரீ கோவிலூர் - காசிகாநந்த சுவாமிகளவர்களால் மொழிபெயர்க்கப்பட் டிருக்கின்றன. யோகாப்பியாசிகட்குஇந்நூல்போல் எந்நூலும் பயன் தராதென்பதுஒருதலையே.

வேதாந்த சித்தாந்த முக்தாவலி.

இது சம்ஸ்கிருதத்தில் பிரகாசாநந்த சுவாமிகளாலியற்றப்பட்டது. இதில் நாநாஜீவவாதத்தையும் ஏகஜீவவாதத்தையும் சுருதி யுக்திப்பிரமாணங்களோடு நன்கு நிரூபித்து, நாநாஜீவவாதத்தைப் பூர்வபக்ஷஞ் செய்து ஏகஜீவவாதத்தைச் சித்தாந்தஞ் செய்திருக்கின்றார். ஏனைய நூல்களில் அநேக விஷயங்களோடுகூட ஏகஜீவவாதமும் நாநாஜீவவாதமும் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன. இந்நூல் நாநாஜீவவாதத்தையும் ஏகஜீவவாதத்தையுமே தெளிவாகப்போதிப்பதால் இஃது அவ்விரண்டு மதங்களையு மறிவதற்கு மிகவும் உபயோக முடையதாம். சம்ஸ்கிருதத்தில் அருமையும், பிரசித்தியும் பெற்றுள்ள இந்நூல் தமிழ் மக்கட் குபயோகமாமாறு தமிழில் வசந வடிவமாக கோவிலூர் மடாலயம் - ஸ்ரீ காசிகாநந்த சுவாமிகளால் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றது. விலை அணா எட்டு.

வேதாந்த டிண்டிமம்.

(வேதாந்தப் பேரிகை.)

இது சம்ஸ்கிருதத்தி லிருந்து கோவிலூர் - ஸ்ரீ சுப்பய்ய சுவாமிகளால் மூலஞ் செய்யுள் வடிவமாயும் அதை விளக்கத் தெளிவான உரையு மியற்றப்பட் டிருக்கின்றது. இதுபோன்ற வேதாந்த நூற்கள் தமிழில் மிகக் குறைவே. ஆகலின் இது வேதாந்த அப்பியாசிகள் ஒவ்வொருவரிடத்தும் அவசிய மிருத் தற்குரியதாம். விலை அணா நான்கு.

வேதாந்த சாரமிருதமும்

அத்துவித ரசமஞ்சரி மூலமும்-உரையும். விலை அணா ஆறு.

(1) **வேதாந்த சாராமிருதம்:**—சதாநந்த பரிவிராஜகாச் சாரியாரால் சம்ஸ்கிருதத்தி லியற்றப்பட்டுள்ளது; வேதாந்தங் கற்க விரும்புவோர்கட்கு ஒரு திறவுகோல் போல்வது. இதில் சாதனப் பிரகரணம், அத்தியாரோபப் பிரகரணம், மகாவாக்கி யப் பிரகரணம், சிரவணுதிப் பிரகரணம், ஜீவன் முத்திப் பிரகர ணம் என்னும் 7 பிரகரணங்கள் சுருக்கமாகவும், விளக்கமாகவும் செவ்விய வசன நடையில் கோவிலூர் - **ஸ்ரீ சுப்பய்ய சுவாமிக ளவர்களால்** தமிழில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. இது வெளிவந்திருக்கும் கட்டளைகட் யெல்லாம் மூலமானதென்பது பிரசித்தமாம். (2) **அத்துவித ரசமஞ்சரி:**—இதில் சதாசிவப் பிரஹ்மேந்திரர் சரித்திரமும், அவரருளிச் செய்த சுலோகம் கிரந்தத்திலும், ஸ்ரீ கோவிலூர் நித்தியானந்த சுவாமிகள் திரு வாய்மலர்ந்தருளிய தமிழ் மூலமும் - உரையும் அடங்கியிருக் கின்றன. இஃது இதுகாறும் கிரந்தத்திலாவது தேவநாகரத்தி லாவது, தமிழிலாவது வெளியாகவில்லை.

ஸ்ரீமத் பாகவதம் சம்ஸ்கிருத மொழிபெயர்ப்பு.

தசமஸ் கந்தம்.—கிருஷ்ண லீலைகளை மிகுதியாகக் காட் டுவது, சித்திரப் படங்களோடு கூடியது. விலை ரூபாய் ஆறு.

1 - 2 - 3 - 4, ஸ்கந்தங்கள் அடங்கிய ஸ்ரீமத் பாகவதம். தனிக்கட்டடம் - விலை ரூபாய் ஆறு

சர்வதர்சன சங்கிரகம்.

இது ஸ்ரீ சங்கரபீடத் தாசிரியரா லெழுந்தருளி யிருந்த ஸ்ரீ வித்யாரண்ய சுவாமிகளாலருளிச் செய்யப்பட்டது. இதில் லோகாயதமுதல் வேதாந்தமீறாக 16 - மத சித்தாந்தங்களடங்கி யிருக்கின்றன. விலை ரூபா 2-8-0

அத்வைதார்த்தப் பிரகாசிகை என்னும்

சங்கராத் துவேஷியாரின் வாய்ப்பூட்டு - விலை அணா ஆறு.

இப்புஸ்தகத்தில் வேதாந்த ஆசாரியராய ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளை ஈஸ்வராவதார மென்றும், அத்வைதமே அடையத் தருந்த தென்றும், அநேக பிரமாண யுக்தியோடு கோவிலூர் - ஸ்ரீ **சுப்பய்ய சுவாமிகளால்** வசன வடிவமாக எழுதப்பட்டிருக்கின்றது. இப்புத்தகத்தைப் படிப்பவருக்கு சைவ சித்தாந்திகள் ஒரு வாற்றானும் வேதாந்திகளை நிந்தித்தற்கு நியாயமில்லை என்பதும், அவர்கள் வாயைப் பூட்டப்பட்டிருக்கின்ற தென்பதும் நன்கு விளங்கும்.

வேதாந்தசாஸ்திர ரத்நாவலி.

பாக்கெட் சைஸ் - ரூபாய் ஒன்று.

இதில் நாநாஜீவவாதக் கட்டளை, கீதாசாரத் தாலாட்டு, சசிவன்னபோதம், மஹாராஜா துறவு, வைராக்ய சதகம், வைராக்கிய தீபம், இலக்ஷணா விர்த்தி, வேதாந்த சூடாமணி, கைவல்லியம் நவநீதம் ஆக ஒன்பது புத்தகங்களடங்கி யிருக்கின்றன. இது ராயல் 32-பேஜில் 50-பவுண்டு கிளேஸ் கடிதத்திலச்சிடப்பட்டு இதுகாறும் வெளிவராத 2 மஹான்களினது படத்துடன் காலிகோ பயிண்டு செய்யப்பட்டிருக்கின்றது.

கைவல்யம் — மூலம்.

இது யாவருக்கும் மநனத்திற் குபயோகமாமாறு மூலபாடமாத்திரம் பாக்கெட் சைசில் (ராயல் 32-பேஜில்) அச்சிடப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு வேதாந்தியினிடத்தும் அவசியமிருத்தற்குரியது. விலை அணா மூன்று.

பஞ்சதசி.

இது ஸ்ரீ சங்கரபீடத் தாசிரியரா யெழுந்தருளி யிருந்த **ஸ்ரீ வித்தியாரண்ய சுவாமிகள்** முமுக்ஷுக்களுக்கு மிகுதியும் உபயோகமாமாறு கருணையோடு பதினைந்து பிரகரணமாகத் தேவவாணியிற் றிருவாய்மலர்ந்தருளினர். அது தமிழ் மக்கட்குப் பயன்படாமை கருதி **கோவிலூர்-ஸ்ரீ நித்தியாநந்த சுவாமிகளால்** முன் பத்துப் பிரகரணமும், **கோவிலூர் - ஸ்ரீ சுப்பய்ய சுவாமிகளால்** பின்னைந்து பிரகரணமும் தமிழில் அரிய செய்யுள் வடிவமாக மொழி பெயர்க்கப்பட்டு 32-பேஜ் பாக்கெட் சைசில் அச்சிடப்பட்டிருக்கின்றது. இஃது ஒவ்வொரு வேதாந்திகளிடத்தும் மனனஞ் செய்வதற்கு அத்தியாவசியக மிருக்க வேண்டியதாம். **விலை அணா பத்து.**

வேதாந்த சித்தாந்த சாரசங்கிரகம்.

இது ஸ்ரீ சங்கராச்சாரியாரவர்களால் திருவாய் மலர்ந்தருளப்பட்டது; ஆத்மாநாத்ம விசாரஞ் செய்பவருக்குப் பரமசாதனமாயுள்ளது; இதுகாறும் தமிழில் வாராதது; வசன நடையிலிருப்பது. விலை அணா 8,

ராமோதந்தம்:—சம்ஸ்கிருத மொழிபெயர்ப்பு. ராமாயணத்தைத் தொடர்பாகவும், சுருக்கமாகவும், விளக்கமாகவும் தெரிவிப்பது. பாலர்களுக்கும் பாலிகைகளுக்கும் மிகவும் உபயோகமானது. விலை அணா இரண்டே.

மெய்ஞ்ஞான போதம் - விலை அணா பன்னிரண்டு.

இது சென்னை, கோமளேசுவரன் பேட்டையில், சோமவாரந் தோறும் பிரசுரமாகும் **லோகோபகாரி** பத்திரிகையின், (1911-வது வருடத்து) முதற்பக்கத்தில் வெளிவந்த வேதாந்த விஷயங்கள் அடங்கிய புத்தகம்; இதில் உபசாந்தத்திற் கேதுவான ஆத்மாநாத்ம விவேகத்தை யுண்டாக்குவதற்குப் பரமசாதனமாக 51-வேதாந்த உபந்நியாசங்க ளடங்கியுள்ளன.

சிவப்பிரகாசப் பெருந்திரட்டு.

(குறுந்திரட்டுடன்). விலை ரூபாய் மூன்று.

இது சொரூபானந்தரால் திரட்டப்பட்டது. இதுகாறும் வெளிவாரதது; சாஸ்திர ரூபமாயுள்ளது. இதில் 224-அதிகாரங்களிருக்கின்றன. முமுட்சுக்களுக்கே யன்றி, மதங்களின் சொரூபங்களையும் அவற்றின் பேதங்களையும் அறிய விருப்பமுடையாருக்கும், உபந்நியாசகர்கட்கு மிந்நூல் பெருங் கருவியாயுள்ளது. இதில் 2821 - செய்யுட்களிருக்கின்றன; பெருந்திரட்டிலில்லாத குறுந் திரட்டின் 424-செய்யுட்களு மிருக்கின்றன. இது டிம்மி 8-பக்கங்கொண்ட 80-பார அளவுள்ளது.

வேதாந்த சூடாமணி-மூலம்.

இது யாவருக்கும் மநநத்திற் குபயோகமாமாறு மூலபாடமாத்திரம் பாக்கட்சைசில் (ராயல் 32 - பேஜில்) அச்சிடப்பட்டிருக்கின்றது;வேதாந்த வித்துக்களிடம் அவசியம் இருக்கத் தக்கது. விலை அணு 2 - 6.

பக்தமாலா வசனம்.

இது, ஸ்ரீ மகீபதிபாவா என்னும் பக்த சிரேஷ்டர் மகாராஷ்டிர பாஷையிலியற்றிய வடதேசத்துப் பக்த சரித்திரங்களடங்கிய சந்த விஜயம், சந்தலீலாமிருத மென்னும் கிரந்தங்களுக் கிணங்கத் தமிழ்ப் பாஷையில்ஸ்ரீ சாது வே.பாலகிருஷ்ண முதலியாரவர்களால் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதில் தென்னிந்தியாவில் வழங்கிவரும் சில பக்தர்களின் சரித்திரங்களும் சேர்க்கப்பட்டு 183-பக்தர்களின் சரித்திரங்களடங்கியிருக்கின்றன. இது மகாராஷ்டிர பாஷையிலுள்ள கிரந்தங்களின் நேர்மொழிபெயர்ப்பாகலின், இப்போது வெளிவந்திருக்கும் பக்தர்களின் சரித்திரங்களிலும் சிலாக்கியமானதாம். இது டிம்மி 8-பக்க அளவில் 743 - பக்கங் கொண்டது. கலிகோ பைண்டு ரூபாய் 3 - 8 - 0.

திருமூலர் திருமந்திரம்.

(குறிப்புரையுடன்)

இது பல ஏட்டுப் பிரதிகளைக் கொண்டு பல வித்வான்கள் முந்நிலையில் பரிசோதிக்கப் பெற்று சுத்தப் பாடமாக அச்சியற்றப்பெற்றுள்ளது; பிரஹ்மஸ்ரீ திரு.அ.சிவாநந்தசாகர யோகீசுவரர்கள் முதலிய தத்துவ வித்துக்களால் குறிப்புரை யெழுதப்பெற்றுள்ளது; டிம்மி 8-பக்கமுள்ள 90 - பார அளவினது. திருமூல நாயனர் படத்துடன் கூடியது; காலிகோ பைண்ட் செய்யப்பட்டுள்ளது. விலை ரூபாய் 3 - 8 - 0

ஆநந்தராமாயணம்.

இதுகாறும் தமிழில் வாராதது; இது வால்மீகி மகரிஷியால் வடமொழியிலியற்றப்பட்டது. இதில் வால்மீகி ராமாயணத்திலில்லாத அநேகவிஷயங்க ளடங்கியிருக்கின்றன; ஸ்ரீராம லட்சுமண, சீதாதேவியின் ஜனனமும், அத்தேவிக்குப் பல பேர் வந்ததற்குக் காரணமும், வேறு அனேக ரகசியங்களு மடங்கி யிருக்கின்றன. இதில் அனேக சித்திரப் படங்களடங்கி யிருக்கின்றன. **விலை ரூபாய் ஐந்து.**

திருக்குத்திருசிய விவேகம்	0	2
நானா ஜீவவாதக்கட்டளை-குறிப்புரையுடன்	0	4
தருக்காமிருதமும் பிரஸ்தான பேதமும்	0	8
கைவல்யம் (பொன்னம்பல சுவாமிகள் உரை)	2	0
,, (சச்சிதானந்த சுவாமிகளுரை)	1	4
,, வினு - விடை - வசனம்	1	4
ஸ்ரீ பஞ்சதசி (2-வால்யம்) வசனம்	10	0
சூதசங்கிதாசாராமிர்த வசனம்	1	0
ஹடயோகப் பிரதீபிகை	1	8
பரமார்த்த நியாயத் தீர்ப்பு	0	12
வேதாந்த சூளாமணி - உரையுடன்	1	4
ஆத்ம போதமும் தத்துவபோதமும்	0	5
தத்துவமசி மகா வாக்யம்	0	2
பிரம்மவிதா சீர்வாதபத்ததி	0	1
கீதாசாரத் தாலாட்டு-உரையுடன்	0	4

ஸ்ரீ சங்கராசாரிய நீலகண்டாசாரிய சம்வாதம்	0	4
ஒழிவிலொடுக்கம் (உரை)	1	0
பிரபோத சந்திரோதய வசனம்	1	0
குமாரதேவ சாஸ்திரக் கோவை	0	10

	ரூ.	அ.			
			தத்துவாநு சந்தானம்	2	8
அத்துவித உண்மை	0	1	நியாயப் பிரகாசம்	4	0
தோத்திரக்கொத்து	0	1	பாலபோதம்	1	0
மநந மாலை	0	2	விசார சந்திரோதயம்	1	4
அறிவாநந்த சித்தி	0	4	விருத்தி ரத்நாவலி	0	12
பாட்டியற்கொத்து	0	8	தருக்க கௌமுதி	0	6
சித்தாந்த பிந்து	0	8	தருக்க சங்கிரகம்	0	4
வேதாந்த பரிபாஷை	0	10	தாயுமானவர் (மூலம்)	0	8
தருக்க பரிபாஷை	1	0	யோக சூத்திரம்	1	0
ரிபுகீதைத் திரட்டு	1	0	வேதாந்தப் பிரதீபம்	0	12
விவேக சூடாமணி	0	8	பிரமகீதை	0	5
தோடகம்	0	4	வேதாந்த பரிச்சேதம்	0	6
சிவமகிம்நஸ்தோத்திரம்	0	1	அபரோட்சாநுபூதி	0	5
நவநீத சாரம்	0	8	மகா வாக்கியம்	0	4
திருக்குறள் (2-வால்யம்)	6	0	குருகீதை	0	6
வியாசபோதினி	0	5	உத்தர கீதை	0	4
விருத்திப் பிரபாகரம்	4	0	ராமகீதை	0	3
விசாரசாகரம்(3ம் பதிப்பு	3	4	பிரபுலிங்கலீலை வசனம்	0	12
வேதாந்தமநந சிந்தாமணி	4	0	சூதசங்கிதை செய்யுள்	1	8
பஞ்சீகரண முதலியன	0	12	நைடதம்-உரை	2	0
சங்கர விஜயம்	1	0	விநோதரசமஞ்சரி	1	2
இந்து பைபில்	1	12	பிரஹ்மானந்தலகிரி	0	1
நாலடியார் உரை	1	2	பாகவதத்திரட்டு	0	6
கந்தாநுபூதி உரை	0	6	அத்யாத்மராமாயணம்	2	8
சிவமகா புராணம்	5	0	பகவத்கீதை-உரை	2	0
குசேலோபாக்யானம்	3	0	பழமொழி அகராதி	2	0
திருவாசகம்	0	10	பட்டணத்தார் பாடல்	1	0
பஞ்சதசப்பிரகரணம்	1	0	மதவிருக்ஷம்	1	12
பக்தலீலாமிருத வசனம்	3	0	வேதாந்தசாரம்	0	10

☞ இந்த ஆபீசில் எல்லாச் சாஸ்திரங்களும், நாவல்களும் கிடைக்கும்.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
10	27	ஜத்காரண	ஜகத் காரண
10	22	டதா ?	டனவா ?
14	22	வஞ்சனே	வஞ்சகனே
16	4	பிராண	பிராணனி
19	21	பதார்த்தங்களைப்	பதார்த்தங்கள்
19	22	படுகின்றதோ	படுகின்றனவோ
19	27	போய்யாகவே	பொய்யாகவே
22	21	சமுகத்தினை	சமூகத்தினை
26	16	போய்யேயாம்	பொய்யேயாம்
29	7	கேட்டோன்	கேட்போன்
29	21	தத்தவமசி	தத்துவமசி
37	25	வர்த்தமன	வாத்தமான
45	6	தேசங	சேதங

வேதாந்த மநந சிந்தாமணி.

புராணங்கள், தர்ம சாஸ்திரங்கள், வைணவ - சைவ - வேதாந்த சாஸ்திரங்கள் எத்தனை யுள்ளனவோ அவற்றின் துண மோக்ஷ வடைவிற்குச் சாதநமாக வுள்ளவைகளை 207-சாஸ்திரங்களி னின்றும் திரட்டி 1760-பக்க அளவி லச்சி ட்டுள்ளது. இஃதொரு பொக்கிஷம் போன்றது. ரூ 4.

சச்சிதாநந்த சிவம்—சுத்தமான 2-வது பதிப்பு.

குரு சிஷ்ய சம்வாதமாக வேதாந்தத்தின் உட்கருத்துக் களைச் செவ்வனே விளக்கிக் காட்டுவது. பிரஹ்மஸ்ரீ சுப்ர மணிய சிவா அவர்களால் சிறைவாச காலத்தில் வசநரூப மாக எழுதப்பட்டது. விலை அணா 14.

கதாசரித்சாகரம்-சம்ஸ்கிருத மொழிபெயர்ப்பு

இதிலிருக்கும் கதைகள் இதுநாறும் கேட்டிராத நவநவமான யுக்திகளுடன் கூடியனவா யிருக்கும். இதுபோன்ற கற்பனைக்கதை வேறொன்றில்லையென்று பண்டித நடேச சாஸ்திரிகள் தீனதயாளு முதலிய நாவல்களி லெழுதி யிரும் பது பிரசித்தமாம். 258-பக்கங்கொண்ட முதற் பாகம் காலிக்கோ பைண்ட் ரூபாய் 1—4.

கதாசரித்சாகரம்-2-ம் பாகம்-200 பக்க முடையது - ராப்பர்-ரூபாய் ஒன்று.

வேதாந்த சஞ்ஞா.

இது கோவிலூர் மடாலயம் ஸ்ரீ காசிகாநந்த ஸ்வாமிகளவர்களால் தமிழில் வசன வடிவமாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதில் வேதாந்தத்தின் பிரக்கிரியைக ளெல்லாம் செவ்வனே விளக்கப்பட் டிருக்கின்றன. வேதாந்த சூடாமணி முதலிய நூல்களை வாசிப்பதற்குச் சிறந்த கருவியாயிருப்பது. இந்நூல் ஹிந்தி பாஷையிலுள்ள பதார்த்தமஞ்சூஷாவின் மூலமாம். விலை அணா இரண்டு.

விவேகாநந்தர் ஞானத்திரட்டு.

1—2 பாகம் சேர்ந்தது ரூபாய் 1—4—0.

இதிலடங்கிய வியாசங்கள்.

1. எதார்த்த மனிதன் போலி மனிதன். 2 சிகாகோ முதற் பிரசங்கம். 3. ஹிந்து மதம். 4. கர்மயோகம் 5. இல்லறம் துறவறம். 6. விக்கிரகாராதனை 7, கடமை. 8. நன்மை, தீமை, 9. முக்தி. 10. பக்தி. 11. பக்தியோகம். 12. ஆசாரியரின் அவசியமென்பது. 13. பரபக்தி. 14. ஞானயோகம். 15. மாயையைப்பற்றியசில கதைகள். 16. ஸ்வாமிகள் சரித்திரம்.

ஞானதரிசனி ...	0 10
தத்துவதரிசனி ...	0 10

லோகோபகாரி ஆபீஸ், சென்னை.